நூலகம்

இலக்கியம்

இந்தப் பூவில் எத்தனை வண்ணங்கள்



பின்னணி மு.வி

உயர்வு உங்கள் கையில்



டாக்டர். உதவிக்கரம் ஜி.முத்து

படியுங்கள்

சங்கப்பலகை

இந்தப் பூவில் எத்தனை வண்ணங்கள்

நூல் திறனாய்வு : பொன்னி நாடன்

பூவண்ணனின் படைப்புகளைத் திறனாய்வு செய்கிறது இந்நூல். சுவையான அவருடைய வாழ்க்கைப் பின்னணி நூலுக்கும் பெருமை சேர்க்கிறது. சிறுவர் இலக்கிய உலகின் சிகரமான பூவண்ணனின் பன்முக ஆற்றல் பளிச்சிடுகிறது.

சிறுவர்க்கான இலக்கியம், புதினம், சிறுகதை கட்டுரை, மொழிபெயர்ப்பு, இதழியல், திறனாய்வு முதலிய வடிவங்களில் முத்திரை பதித்துள்ள பூவண்ணனின் எண்ணங்களை

வண்ணங்களாகக் காட்டி மனம் கவர்கிறார் பின்னலூர். மு. விவேகானந்தன்.

நூலில் நுழைவாயில் திரு விக்கிரமன், திரு வாசவன் தத்தம் அணிந்துரைகளால் நூலை அணி செய்துள்ளனர். இவர்கள் வாழ்த்துப் பூக்களைக் கொட்டி வைத்துப் பூவண்ணனுக்குப் பொலிவு சேர்த்துள்ளனர்.

ஏழுவண்ணங்களில் வானவில்லாக ஏழு தலைப்புகள்! ஒவ்வொன்றும் தனிவண்ணம் காட்டி நம் கருத்தை ஈர்ப்பதாய் உள்ளது. பூவண்ணச் சித்திரமாய் ஏழு கட்டுரைகளும் உள்ளன பூவண்ணனின் பூமுகத்திற்கு எத்தனை இதழ்கள்!! பன்முக ஆற்றலை வெளிக்காட்டும் விதத்தில் அவரது படைப்புகள் பல இந்நூலில் அலசப்படுகின்றன.

நூன்முகத்தைப் பூமுகத்தால் அலங்கரிக்கும்படியான **அட்டைப்படம்** முதலாக அனைத்துப் பக்கங்களிலும் மணம் பரவி நிற்கிறது. பின்னலூராரின் நூல் பின்னும் திறமைக்கு இந்நூல் ஒரு சான்று புதுநடையால் பாத்தொடுத்தும், கருத்து நார்களால் பின்னியும் செல்லும் அழகு பாராட்டும்படி உள்ளது. உரைப்பின்னலாகவும். கவிதை மின்னலாகவும் அமைந்துள்ள பின்னலூராரின் பாங்கு இரசனையோடு உள்ளது.

பூவண்ணனின் இளமைக்கால நினைவலைகள். படைப்பு எழுந்த சூழ்நிலைக்கான பின்னணி முதலியவை நூலுள் நம்மை நுழைந்து பார்க்கத் தூண்டுவன.

மழலை இலக்கியத்தின் மாமேதை... மாமேரு பூவண்ணன் என்பதை இந்நூலைப் படிப்போர் உணர்ந்து கொள்வர். பூவண்ணனுக்குப் போலியான புகழாரம் அன்று இந்நூல்! உண்மையும் உழைப்புமிக்க படைப்பாளி ஒருவரிடம் இயல்பாக நிலவக்கூடியதும்; இருக்க வேண்டியதுமான அறிவுத் தேடலின் அத்தியாயத்தைப் பின்னலூரார் அணுகி எழுதியுள்ளார், இஃது உண்மையான உழைப்பிற்குக் கிடைத்துள்ள வெற்றி.

இந்த நூல்சோலை வண்ணக் காட்சிகள் பலவும் கொண்டது. நூல் நுவலும் செய்திக்கு முன் அழகிய வரிகளில் அமைந்துள்ள கருத்துத் தோரணங்கள் ஈர்ப்பனவாய் உள்ளன. தக்க மேற்கோளாட்சிகள், தெளிவான நடைப் போக்கு ஆகியவை படைப்பாளியைக் காட்டுதற்குரிய திறன்களாக அமைந்துள்ளன. பூவண்ணன் என்னும் படைப்பாளியை ஒரு படைப்பாளி மனந்திறந்த பாராட்டுதலோடு படைத் துள்ளார்.

இந்நூலுள் ஒரு செய்தி விடுபட்டுள்ளது. எட்டாண்டுக்கு முன் பூவண்ணன் படைப்புகளை டாக்டர் பட்டத்திற்கும் ஆய்வு செய்து முனைவரான நூலக ஞானி டாக்டர். பா. பெருமாள் பற்றிய செய்தி சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆசிரியர் பின்னலூர் **மு. விவேகானந்தன்** எம். ஏ.,
பதிப்பகம்: குழந்தை இலக்கியக் கழகம்
72, கிருஷ்ணா நகர் சென்னை-91.

பக். 200 ரூ. 50-00



நூலக இலக்கியத்தின் கதை: வரலாறு —விரைவில்

பாராட்டுகிறோம்

"சேவா ரத்னா" சிறந்த மனிதர் 1995 விருது

பல்வேறு துறையில் சிறந்த சாதனையாளர்கள், கல்வி மான்கள், பிரபலமானோரைத் தேர்ந்தெடுத்து, தி சென்டினேரியன் டிரஸ்ட் விருது வழங்கியது.

'சங்கப்பலகையைத் துவங்கி பெருமளவில் மக்கள் படிக்க தூண்டுகோலாக இருக்கும் டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் "சேவா ரத்னா" சிறந்த மனிதர் 1995 விருதுக்குத் தேர்வு பெற்றார்.

டாக்டர் வேங்கட சுப்ரமணியன் முன்னாள் துணை வேந்தர் பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், 'தி சென்டினேரியன் டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியும் கூட இவர். ஏற்பாடு செய்திருந்த விழா பாரதீய வித்யாபவன் (மைலாப்பூர்) அரங்கில் சமீபத்தில் (4.2.96, அன்று மலை 6.00 மணியளவில்) நடைபெற்றது.

டாக்டர், எம். கோபாலகிருஷ்ணன் முன்னாள் தலைவர், நிர்வாக இயக்குநர் இந்தியன் வங்கி, விருதுகளை வழங்கினார்.

"சேவா ரத்னா"- சிறந்த மனிதர் 1995-விருது பெற்ற டாக்டர், அப்பாஸ் இப்ராகிம் சங்கப்பலகை, தலைவர், நிர்வாக இயக்குநர் அவர்களை நூலகம் இலக்கியம் பாராட்டி, வாழ்த்துகிறது.

—ஆசிரியர்

கவிஞர் நாகநந்தியின்

நெருப்பிலே குளிக்காத நிலவு



(புதுக்கவிதை)
மூடுபனியின் மோகத்தீ
தேனிலவின் தேகத்தீ
வேள்வியின் விளைச்சலிது
வெளிச்சம் வருகிறது
படித்து ரசிக்க ரசித்துப் படிக்க

கவியரசு

வைரமுத்து வாழ்த்துகிறார்

கவிஞனாக இருப்பதென்பது ஆழிசூழ் உலகை
ஒரு குழந்தையைப்போல் பார்த்து
ஆச்சரியப்படுவதில் இருக்கிறது.
தமிழ்ச் செய்யுள் இலக்கணம் இயல்பாகவே
தாளலய ஓசைகளால் பின்னப்பட்டிருக்கிறது
என்பார் கவியரசு கண்ணதாசன்.

அந்தவகையில் சந்தத்தோடு எழுதிவருகிற
கவிஞர் நாகநந்தியின் எழுத்துக்களுள்

கவிதைவீச்சு கண்சிமிட்டுவதை என்னால்
கண்டுகொள்ள முடிகிறது.
நாகநந்தி முனைந்து யாப்பிலக்கணம்
கற்றுக்கொண்டால் சொற்களைச் சிக்கெடுக்கும்
சூட்சுமம் விளங்கிவிடும் என்று உறுதியோடு
உத்தரவாதம் தருகிறேன்.

நண்பர் நாகநந்தி மிகச் சிறந்த இலக்கிய
ஆர்வலர்.
நான் செல்கிற இலக்கியக் கூட்டங்கள்
எல்லாவற்றிலும் முன்வரிசையில் முகிழ்த்திருக்கிற
முகங்களுள் நாகநந்தியின் முகமும் ஒன்று.
களைக்காத தும்பியைப்போல் தன் இலக்கிய
நண்பர்களின் சிற்றிதழ்களுக்குச் சளைக்காமல்
சந்தா சேகரிக்கும் செயல்வீரர்.

இடைவிடாமல் ஏதாவதொரு நூல்பயிலும்
இயல்புடையவர்.
நாகநந்தியோடு பேசுவது ஒரு குழந்தையோடு
உரையாடுவதைப் போன்ற குதூகலமான
அனுபவம்.

எவரையும் புண்படுத்தாமல் பேசும் கலையை
இவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த 'நெருப்பிலே குளிக்காத நிலவு' தொகுப்பு
நாகநந்தியின் நீண்டநாள் இலக்கிய இலட்சியம்.
இத்தொகுப்பில் குறைகளைவிட நிறைகளையே
காண வேண்டுகிறேன்.
எப்பாடுபட்டாவது தன் கவிதைகளை அச்சிலேற்ற
வேண்டும் என்ற நாகநந்தியின் முயற்சிக்காகவும்—

கவிதைகளின்பால் அவருக்குள்ள காதலுக்காகவும்—
அவரது அடங்காத இலக்கிய ஆர்வத்துக்காகவும்—
எந்தவித இலக்கணக் கட்டுப்பாடும் இல்லாது அவர்
சுதந்திரமாக எழுதியுள்ள இந்தக் கவிதைகளை
வரவேற்று வாழ்த்துகிறேன்.

—வைரமுத்து
20—10—94

கவிஞர் நாகநந்தி
20, முத்தியப்பா தெரு,
(நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)
சென்னை—600 030.

நல்ல உலகம் நாளை மலரும்

சங்கநாதம் செய்யும் கவிதைகள்

சிறுகதை மன்னர் ஜெயகாந்தன் கூறுகிறார்

முத்தமிழ்க் கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு நன்கு அறிமுகமான கவிஞர். இவரது படைப்புகள் பலதுறைகளில் கவிதைகளாகவும் கவிதை நாடகங்களாகவும் இசைப் பாடல்களாகவும் காப்பியமாகவும் சிறுகதை, புதினங்களாகவும் என்பதுக்கு மேற்பட்டவை நூல் வடிவத்தில் வெளிவந்து வாசகர் உலகில் நற்பணி ஆற்றி நற்பெயர் ஈட்டி உள்ளன.

'நல்ல உலகம் நாளை மலரும்' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள இக்கவியாரம் நம்பிக்கை மணம் கமழ்வதாய்த் திகழ்கிறது. இலக்கியம் எந்த வடிவத்தில் அமைந்திருந்தாலும் படிப்போர் மனத்தில் நம்பிக்கை ஊட்டுவதாய் அமைதல் வேண்டும். நம்பிக்கை தராத இலக்கியம் இலக்கியமே அல்ல.

இந்தத் தொகுப்பில் உள்ள கவிதைகள் அனைத்துமே மரபு வழிக்கவிதைகளாகும். அதே போதில் புதுமைக் கருத்துக்களும் புதுமை நோக்கங்களும் வலியுறுத்தப்படுவதால் பாரதி, பாரதிதாசன் கவிதைகள் போல் மரபுவழி வந்த புதுமைக் கவிதைகள் இவை எனக் கூறுவது பொருந்தும். பாரதிதாசனாரின் சாயலும் பார்வையும் அவருக்குப்பின் வந்த எண்ணற்ற கவிஞர்களை நல்ல முறையில் பாதித்துள்ளன. அந்தப் பாதிப்பு இவரிடமும் சிறப்பாக மேலோங்கி எடுப்பாகக் கருத்துக்களில் மிளிர்கிறது.

சமூக நீதிக்காகவும் உலக அமைதிக்காகவும் மனித நேயத்துக்காகவும் இந்தக் கவிதைகள் சங்கநாதம் செய்கின்றன. தமிழ்க் கவிதைக்கு வேண்டிய எளிமையும் அதற்கு இணையான கம்பீரமும் உண்மையும் அதற்கு ஆதாரமான உறுதியும் இவரது கவிதைகளில் மிடுக்காய் எடுப்பாய்த் தொனிக்கின்றன.

பெரும்பாலான கவிதைகள் எண்சீர்களில் அமைந்திருந்த போதிலும் அவற்றிலேயும் ஓசை நயமும் சந்த அழகும் இருப்பது பாரதிதாசனின் நடையை நினைவூட்டுகின்றன.

புதுக்கவிதை என்ற பெயரில் வடிவமற்றதும் பொருளற்றதுமான நொண்டிக் கவிதைகள் நூறு உலாவரும் இக்காலத்தில் அவற்றின் நடுவே இவரது கவிதைகள் கம்பீரமாக உலாவருவது தமிழ் உணர்ச்சி உடையவர்களுக்கெல்லாம் ஒரு தனி மகிழ்ச்சியைத் தரும். தர வேண்டும்.

கவிதை நடையில் நாடகம் எழுதுவோர் இக்காலத்தில் மிகவும் குறைவு. இல்லாதது ஒரு குறைகூட. அந்தக் குறையை இந்தத் தொகுதியில் உள்ள 'மனம்போல மனைவி' எனும் கவிதை நாடகம் சிறப்புற நிறைவு செய்கிறது.

மாணவ மாணவிகள் மத்தியில் கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் மிகப் பிரசித்தமானவர் என்பதனை என் குழந்தைகள் மூலம் அறிந்தேன். இவரது படைப்புகளை வானொலியில் இசைப் பாடல்களாகப் பல முறை செவியுற்று

மகிழ்ந்திருக்கிறேன். தமிழிலும் கவிதையிலும் சிறப்பாகக் கல்வியிலும் பெரிதும் ஈடுபாடு உடைய கவிஞரின் படைப்புகள் யாவும் சமுதாயப் பணியைத் தலையாய நோக்கமாய்க் கொண்டவை. சமுதாயப் பணியின் சிறப்பு அம்சமே தனி மனித உள்ளங்களை மேன்மைப் படுத்துவதுதான். அப்பணியை இவரது எழுத்துக்கள் மேன்மையாகச் செயல்படுத்துகின்றன.

''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றும் உள்ளத்தில் ஊறுதல் கவிதை! என்றும் நமது முன்னோர்களால் சொல்லப்பட்ட விளக்கங்களுக்கு அடையாளமாகத் திகழ்கின்ற கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களின் இக்கவிதைத் தொகுப்புக்கு அணிந்துரை வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வளர்க கவிஞரின் இலக்கியப் பணி.

நல்ல உலகம் நாளை மலரும்.

ஆலந்தூர் கோ. மோகனரங்கன்.
டிசம்பர் 1995. பக்கம். 192 ரூ, 40.
14-2வது குறுக்குத்தெரு,
வெளியீடு: வசந்தா பதிப்பகம்,
குன்றக்குடி நகர், ஆதம்பாக்கம், சென்னை-600 088.

திரு A.G.S. மணி

ஆசிரியர் நூல்தொகையும் அறிமுகமும் அடுத்த இதழில் வெளிவருகிறது.

எம். கே. டி. பாகவதர் கதை

—"ராஜ்"

எழிலிசை மன்னன் என்று பெயர் சூட்டினார்கள் அப்படியே அழைத்தார்கள்.

ஆனால் ஒரு சிலர் அது எப்படிச்சரியாகும்? ஏழிசை மன்னர் என்ற பட்டமல்லவா அவருக்குச்சாலப் பொருந்தும் என்றார்கள்.

எது சரியோ, எது சரியில்லையோ? அவர் மன்னவராகவே வாழ்ந்தார். மக்கள் மனத்தை ஆக்கிரமித்துக்கொண்டு தன் இசை அரசை நடத்தினார்.

வெண்கலமாய் ஒலித்த அவருடைய பொன் குரலைக் கேட்ட போதெல்லாம் தமிழகமே மெய்மறந்து நின்றது.

இது சரித்திரம்

விந்தனின் எம். கே. டி. பாகவதர் கதை மீண்டும் அந்த சரித்திரத்தைச் சொல்லவில்லை அந்த சரித்திர நாயகனைப் பற்றிச் சொல்கிறது. அதிலும் அந்த மன்னரைப் பற்றிச் சொல்லவில்லை. அந்த மன்னனில் இருந்த மாமனிதனைப் பற்றிச் சொல்கிறது. இதோ ஒரு சில துளிகள்!

சென்னையில் ஒரு சமயம் ஒரு பங்களாவில் பாகவதர் விளாத்திகுளம் சுவாமிகளுடன் தங்கியிருக்கிறார். இரவு வேளை. இருவரும் மாறி மாறி பாடிக்கொண்டிருக்கிறார்கள். பாகவதர் புன்னாக வராளியில் பாடுகிறார். அப்போது பங்களாவின் முகப்பில் ஒரு சலசலப்பு. பாகவதரின் பாட்டைக் கேட்டு ஒரு நாகம் படமெடுத்து ஆடுகிறது. அங்கிருக்கும், வேலையாள் தடி கொண்டு அதை அடிக்கிறான். சத்தம் கேட்டு பாகவதர் பாட்டை நிறுத்திவிட்டு அங்கே விரைகிறார். "அடிக்காதீர்கள் அது படமெடுத்து ஆடியது குற்றமென்றால், அது ஆடும் படியாக பாடியது என் குற்றமல்லவா?" என்கிறார். ஆனால் அவர் அங்கு போய் சேருவதற்குள் பாம்பின் கதை முடிந்து விடுகிறது. அதைப் பார்த்து அவர் அழுகிறார். அந்த பாம்பை அவரே நல்லடக்கம் செய்கிறார். அதற்குப் பாலும் வார்க்கிறார்.

என்ன மென்மையான இதயம் இந்த மனிதனுக்கு!

சேலம் பொருட்காட்சியில் அவருடைய கச்சேரி மைதானம் முழுமையும், சுற்றி இருந்த கட்டிடங்கள் மேலிலும்,

அந்த மைதானத்திலிருந்த மரங்கள் மீதிலும்-எல்லாவற்றிலும் மனிதர்கள், மனிதர்கள், பனிதர்கள். பாகவதர் பாட ஆரம்பிக்கவும் அங்கே தெய்வீக அமைதி. திடீரென ஒரு சத்தம். ஒரு கம்பத்தின் மீதிருந்து ஒரு மனிதன் மின்சாரம் தாக்கி கீழே விழுந்து இறக்கிறான். அடுத்து அதே மாதிரி இன்னொருவன். பாகவதர் கலங்குகிறார் என் பாட்டைக் கேட்க வந்த இவர்களுக்கா இந்த கதி? அவரால் பாட முடியவில்லை நிறுத்திவிடுகிறார். ஆனால் பாட்டைக் கேட்க வந்த ஆயிரக்கணக்கானவர்கள் அவருடைய மெல்லுணர்வை புரிந்துகொள்ளாமல் கலவரம் செய்து அவரைப் பாட வைக்கிறார்கள்.

தன் ரசிகர்கள் இருவர் துர்மரணம் அடைந்த போது துயரடைந்து பாட முடியாதென்றாரே, அதுவல்லவா மனிதத் தன்மை?

இவருடைய நல் இதயத்தின் துடிப்பை அறிய மேலே குறிப்பிட்ட சம்பவத்தைத் தொடர்ந்தாற் போலவே ஒரு நிகழ்ச்சி

அன்று இரவு கச்சேரி முடிந்த பிறகு பாகவதருக்கு நெருங்கிய ஒருவர், அவரிடம் சொன்னார். "ஐயா, இப்போதே அறிவித்து விடுங்கள் இறந்தவர்களில் குடும்பத்திற்கு தலா ரூபாய் ஆயிரம் அளிப்பதாக நான் உடனே இதைக் கொட்டை எழுத்துக்களில் எல்லா செய்தித்தாள்களிலும் போட்டு விடச் சொல்கிறேன். இதுவும் ஒரு விளம்பரமாகும்"

பாகவதர் அவரை வெறுப்புடன் பார்த்தார். சொன்னார். "எரியும் வீட்டில் சுருட்டுப் பற்ற வைக்க வேறு யாரையாவது பாரும்" அந்த மனிதர் பதில் பேசாமல் இடத்தைக் காலி செய்தார்.

ஆனால் பாகவதர் அடுத்த நாளே வாங்கியவருக்கும் கொடுத்தவருக்கும் மட்டும் தெரியும் வண்ணம் அவ்விருவர் குடும்பத்தினருக்கும் தலா ஆயிரம் ரூபாய் அனுப்பிவைத்தார்.

இதுவல்லவோ மனித நேயம்?

இம்மாதிரி நிகழ்ச்சிகளை விந்தன் தன் புத்தகத்தில் விவரிக்கும் போது அவைகளை நாம் படிப்பதுபோல் இல்லை. பார்ப்பது போல் இருக்கிறது.

தமிழ் இசை உலகில், தமிழ் திரை உலகில் ஒரு சகாப்தத்தை ஏற்படுத்திய அந்த மாமனிதனுக்கு கடைசியில் நேர்ந்த முடிவைப் படிக்கும் போது ஒரு துன்பயில் காவியத்தைப் படித்த உணர்வு நமக்கு ஏற்படுகிறது. மனதைத் தொடும் இந்நூலைப்படைத்த விந்தனுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

—ராஜ்

பரிசும் பாராட்டும் பெறுகிற இதழுக்கான சிறப்பு அம்சங்கள்

—பொள்ளாச்சி நசன்

- ☐ இவ்விதழ்கள் நுணுக்மான செய்திகளுடையவைகள்.
- ☐ மொழிவளர்ச்சிக்கான அடித்தளமிடுபவைகள்.
- ☐ காலத்தால் அழியாத கருத்துப் பெட்டகங்கள்.

நூலகம் இலக்கியம்.

6. மு. வ. தெரு, அரும்பாக்கம். சென்னை-106-லிருந்து நூலக ஞானி, பா. பெருமாள் அவர்களால் செப்டம்பர் 95-ல் தொடங்கப்பட்டது 4 இதழ்களை வெளியிட்டுள்ளது. நூலகச் செய்திகளை, நூல்கள் பற்றிய விபரத்தை, பதிப்பகங்களை—முதன்மைப்படுத்தி வெளியாகி வருகிற இதழ் இது. பொது நூலகத்துறையின் வளர்ச்சி பற்றிய இரா. கண்ணனின் கட்டுரை. நூலகத்தந்தை. 100 ஆண்டு நூலகத்தமிழ் நூற் றொகை விளக்கம். சென்னை பொது நூலகச்சட்டம் பற்றிய கட்டுரைகள் எனத்தரமான கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. பதிப்பகங்களின் வரலாறு என, மணிவாசகர் பதிப்பகம் (ச மெய்யப்பன்), விஜயா பதிப்பகம் (வேலாயுதம்), மணிமே கலைப் பிரசுரம் (லேனா தமிழ்வாணன்), என. பதிப்பகம், பதிப்பகத்தார் பற்றிய குறிப்புகளை வெளியிட்டுள்ளது. அமெரிக்கத்தகவல் மையநூலகம், திருக்குறள் நூலகம் எனச் சிறப்பு மிகுந்த நூலகங்களின் விபரப் பட்டியலைத் தந்துள்ளது.

என்னைக் கவர்ந்த நூல்கள் எனப்பிரபலங்கள் படித்து மகிழ்ந்த நூல்கள் பற்றிய தொடர் சுவையானதே. சுரதா, வல்லிக்கண்ணன் அசோகமித்திரன், வே. சபாநாயகம்/ பூவை. அமுதன் எனப் படைப்பாளர்கள் பரிசு பெற்றபோது.

இதழில் வெளியிட்டு மகிழ்ந்த நல்ல தன்மையைக் காண்கி றோம். முல்லை முத்தையா, கோட்டையூர் ரோஜா முத்தையா எனப் புத்தகத்தை 'வாழ்வோடு' இணைத்துக் கொண்டவர் களை இதழில் குறிப்பிட்டுள்ளது. படியுங்கள் எனவும், பதிப்பக வெளியிடுகள் எனவும் நூல்கள் பற்றிய அறிமுகத் தைச் செய்துள்ளது. சிறந்த வாசகர் கடிதங்களையும் வெளி யிட்டுள்ளது.

நூல்களின் விற்பனைக்கு இவ்விதழ் அறிவித்துள்ள சங்கப் பலகைத் திட்டம் மிகுந்த பயனுடையது.

□பரிசு பெற்ற இவ்விதழைச் சிற்றிதழ்ச்செய்தி வாழ்த்துகிறது□

□2□ சலங்கை.

தரமான எழுத்துக்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவும், தகுதியானவர்களைத் தமிழுலகுக்கு அடையாளம் காட்டவும், நல்ல தமிழ் வளர நாளும் உழைத்திடுவோம், அல்லலே இல்லாத அகிலத்தைப் படைத்திடுவோம்—என்ற தலைப்புக குறிப்புடன் 5. பிஷப்தோட்டம் விரிவு, சென்னை 28 விருந்து வெளியாகிவருகிற மாத இதழ் இது

ஏப்ரல் 95-ல் தொடங்கி 9 இதழ்களை வெளியிட்டுள்ளது ஆசிரியர் இரத்தினகணேசன். இலக்கிய ஆலோசகர். மு. விவேகானந்தன்.

குறுந்தொகை, கம்பனின் எண்ண இயைபு, மந்தரை, கலித்தொகையும் கம்பரும் என இலக்கியப் பிரிவுகளை வெளி யிட்டுள்ளது.

ஆலந்தூர் மோகனரங்கன், பூவண்ணன். ந. இறையவன், பூவை அமுதன், இளமாறன், ஆற்றலரசு. செவ்வேள், பல்லவன், தமிழப்பன், பின்னலூரான், கோமகன், புகழேந்தி எனத் தரமான கவிஞர்களின் கவிதைகளை வெளியிட்டுள்ளது. சிரிப்பின் சிறப்பு, நட்புச்சிந்தனைகள், சொல்வளம், கலைஞ ரின் எழுத்தோவியங்கள் எனத் தரமான கட்டுரைகளும் உள்ளன. அறிவானும் இல்லை. அறியானும் இல்லை

புலனடக்கம், சத்யஞானசபை-உளத்தூய்மை செய்கிற கட்டுரைகள் பெருஞ்சித்திரனார், எஸ் ஏ. பி., ம. பொ. சி , கி. ஆ. பெ., நினைவுக் கட்டுரைகளையும் இது வெளியிட்டுள்ளது,

அலையின் பசி, கோபுரத்துக் கிளிகள். சந்தோஷங்கள். நாணயம், செல்லாத எட்டணா போன்ற தரமான சிறுகதைகளையும், உருது மொழிச் சிறுகதையான சோகத்தைப் பொழிந்த குழல் கதையையும், நாட்டுப்புறக் கதைகளான பெரியசாமியும் சின்னசாமியும், மூன்று பலசாலிகள் கதைகளும் —இதழில் வெளியாகியுள்ளன.

பிற இதழ்களின் தரமான இலக்கியப் படைப்புகள் மறு பிரசுரம் ஆகியுள்ளன. வல்லிக்கண்ணன். விக்ரமன் இருவரையும் பேட்டிகண்டு எழுதியுள்ளது. தமிழில் மேலை மருத்துவ நூல்கள் என அ. கதிரேசன் எழுதியுள்ளது தரமான ஆய்வுக் கட்டுரையாகும். நூல் அரங்கம் எனப் புத்தகங்தள் பற்றிய மதிப்பீடு. பாட்டுப் பாடவா என புதுக்கவிதைப் பக்கம் வெளியிட்டுள்ளது.

இதழின் தலையங்கம்—கல்வி, அரசியல், மொழி, அறிவியல்... எனப்பலவழி கண்டு சுட்டியுள்ளது. இதழின் துணுக்குகள் மொழிக்கு உரமேற்றுபவைகள். வாசகர் எதிர்வினையும் பதிவாகியுள்ளது.

□3□ சித்தா உலகம்.

ஐக்கிய மருத்துவ அறக்கட்டளை சார்பில் சித்த மருத்துவத்தின் உண்மைகளை, அறிவியல் துணையுடன் குறிப்பிடுகிற மாத இதழிது. டாக்டர். கே. தாமோதரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு—ஏபரல் 95-ல் தொடங்கிய இவ்விதழ் 8 இதழ்களை வெளியிட்டுள்ளது சித்த மருத்துவத்திற்கான அஞ்சல்வழிப் பயிற்சியும் தரப்படுகிறது. காந்த வைத்தியம் [K. காரூன்], சித்தர்கள் தத்துவம் [S. கிருஷ்ணமூர்த்தி], மானிடக்குறள் [சாமிகிரிச்சித்தர்], சிததர் இலக்கியம் ஒரு பார்வை [K. கோபி]— எனத் தரமான தொடர்களை இவ்விதழ் வெளியிட்டுள்ளது. மகளிர் மருத்துவம் தொடர்பான

ஸ்ரீமதி அவர்களின் தொடர் விளக்கக் கட்டுரை மிகவும் பயனானதே. மறைந்து வருகிற வர்மசிகிட்சை பற்றி கெ. எடிசன் 2 இதழ்களில் குறிப்பிட்டுள்ளார். ஊசி உணர்வுத் தூண்டல் வகையிலான, புதுமையான உணர்வகற்று முறை பற்றிய வி. கே. அலெக்சாண்டரின் தொடர் வரவேற்கப்பட வேண்டியதே திருமூலர் பற்றியும், உணவும் மருந்தும் என்கிற கட்டுரையில் உணவுபற்றியும் ஆசிரியர் குறிப்பிடுவது பயனாகுவதே.

சித்த மருத்துவ மூலிகைச் சரக்குகளான, அதிமதுரம், திப்பிலி, சீரகம், சாம்பிராணி, பெருங்காயம் என்பவைகளின் உபயோகத்தை டாக்டர் தாமோதரன் மற்றும் ராமமூர்த்தி விளக்குவதைக் காண்கிறோம். மேலும் டாக்டர். தாமோதரன், தூதுவளை, எருக்கஞ்செடி புதினா போன்றவைகளின் பயன்களையும் விவரிக்கிறார்.

போதைப் பொருட்கள், எய்ட்ஸ். இரத்த அழுத்தம், சிறு நீரகக் கோளாறு, குழந்தையின்மை, விஷக்கடிக்குப் பச்சிலை, மாந்தம், தோல் அரிப்பு, வயிற்றுப்புண், தாய்மைப்பேறு—என இவ்விதழில் உள்ள கட்டுரைகள் உடல், உள நலனைக் காக்கும் கட்டுரைகளே.

3-வது இதழிலிருந்து இதழின் அட்டையில், சோற்றுக் கற்றாழை நெல்லிக்கனி, எலுமிச்சை, துளசி, ஆடாதோடை, வேம்பு—என மூலிகைகளின் வண்ணப் படத்தை வெளியிட்டு, அது பற்றிய விளக்கத்தையும், பயனையும் ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகளும், டாக்டர். தாமோதரன் அவர்களும் விளக்கியுள்ளது ஒவ்வொருவரும் பாதுகாத்துப் பயன்படுத்தப்பட வேண்டிய முக்கியமான தகவல்களே.

□4□ மன்னர் மலர்.

அறிஞர் திரு. தேவஆசீர்வாதம் அவர்களது ஆய்வு நூல்களைப் படித்து அவரை வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு, தமிழ் இலக்கியத்தில் பள்ளர், தேவேந்திரகுல வேளாளர் என்ற ஆய்வு நூலை எழுதிய டாக்டர். குருசாமி சித்தர் அவர்களால்

ஜனவரி 95-ல் தொடங்கிய இவ்விதழ் 12 இதழ்களை வெளியிட்டுள்ளது.

தமிழ் எங்கள் உயிருக்கு நேர், என ஒவ்வொரு இதழிலும் மொழியை முதன்மைப்படுத்தி வருகிறது. மள்ளர் இனம் 500 ஆண்டுகளுக்கு முன்புவரை, நம் தமிழ் மண்ணை ஆண்ட மூத்த தமிழினம் இன்று பிறமொழிக்காரர்களாலும், தமிழினத் துரோகிகளாலும்,—ஒடுக்கப்படுகிற இனம். இதனாலேயே தமிழ்ப் பண்பாடு நாகரீகம், கலாச்சாரம். ஒழுக்கம் சீரழிந்துள்ளது—என்ற கருத்தை அடிநாதமாகக் கொண்டது இவ்விதழ். தேவேந்திரர்களின் வீர வரலாறு, மள்ளர்—பள்ளராக வீழ்ந்தப்பட்ட விதம்பற்றி இதழ் விளக்குகிறது.

தேவேந்திரகுல வேளாளர் சங்கத்தின் மாநிலத்தலைவராகவுள்ள ஆசிரியர் இதழ்வழி இணைப்பேற்படுத்துவது, குறிப்பிடத்தக்கது. இதழ் வெகுஜன இதழ்களைச் சுட்டி, குட்டுவதுடன் மள்ளர் மக்களை இணைப்பதற்காக ஊர்வலங்கள், பேரணிகள், மாநாடுகளையும் ஒழுங்கு செய்வதையும் காண்கிறோம்.

இவ்விதழில் வெளியாகுகிற சிறுகதைகள்—சாதிய அடக்குமுறையின் அவலங்களை, சாதிக் கொடுமைகளை விவரிக்கின்றன. இதழிலுள்ள வசந்த முல்லை தொடர்கதை, சுவையானது.

செய்தியும் விமர்சனமும் என்கிற தொடரில் செய்திகளைக் கூறி அதன் அடிப்படையில் அமைந்த இனத்துரோகத்தை வெளிப்படுத்துகிறது. தளபதி சுந்தரலிங்கனார் வரலாற்று நாடகத்தைப்பற்றி சிற்பி எழுதியுள்ளார். அரசியல் கட்சிகளின் முகத்திரையைக்கிழித்து உண்மை முகத்தை—மக்களுகு எதிரான போக்கை—விவரிக்கிறது.

தமிழ் மதம் பற்றிய மனோகர மள்ளரின் குறிப்பும், சாதியின் தோற்றம், வளர்ச்சி பற்றிய தே. ஞானசேகரன் அவர்களது குறிப்பும் ஆய்வு நோக்குடைய சிறந்த கட்டுரைகள்.

□5□ **தமிழர் முழக்கம்** [ஒளிப்படப்பிரதி இதழ்]

யாதும் ஊரே யாவரும் கேளீர்—தலைப்புடன், 8-வது உலகத் தமிழ் மாநாடு வட்டப்படத்துடன், எழுத்தாணி கொண்டு எழுந்து நிற்கிற வள்ளுவர் படத்துடன் ஜனவரி 95-ல் தொடங்கிய இவ்விதழ் 12 இதழ்களை வெளியிட்டுள்ளது. ஆசிரியர். பொறி. அமலன்.

முதல் இரண்டு இதழ்களை கையெழுத்தில் எழுதி. பிறகு ஒளிப் படப்பிரதி யெடுத்தும், பிறகு வந்த இதழ்கள் தட்டச்சு செய்து ஒளிப்படப்பிரதி யெடுத்தும், பிறகு தட்டச்சிலும் இதழ்கள் வந்துள்ளன.

சாதி, மத பேத உணர்வுகளை வேரறுக்கவும், மொழி, இன உணர்வுகளைப் பேணிடவும், தமிழனென்று சொல்லி, தலைநிமிர்ந்து வாழவும், பிறப்பால் சிறப்பு இல்லை என்பதை வலியுறுத்தவும்—இவ்விதழ் திருச்சி 21 லிருந்து தொடங்கப் பட்டது.

இவ்விதழில் தமிழின முன்னேற்றக் கருத்துக்களடங்கிய, கதை. கவிதை, கட்டுரை. துணுக்குகளைக் காணமுடிகிறது. தமிழ் என் அறிமுகப்படுத்துதல், தமிழ் இலக்கியம் பற்றி விவரித்தல், தமிழ் மருத்துவம் பற்றி விளக்குதல் எனத்தமிழுக் கான முழக்க இலக்கினை இதழில் வெளிப்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைக்கான உணர்வுக்குரலை இவ்விதழ் உரத்துக் கொடுத்துள்ளது. பண்பாட்டுக்கொலை என ஆர்ப் பாட்டத் திருமணத்தை விமர்சித்துள்ளது.

இயற்கை உணவு, நோயின்றி வாழ்வோம் என்பதற்காக கேள்வி பதில் வடிவில் அமைந்த விளக்கக் குறிப்புகளை வெளி யிட்டுள்ளது.

எதிரொலி என வாசகர் கடிதங்களையும் வெளிட்டுள்ளது.

புதிய பதிற்றுப்பத்து எனப் புதிய அணுகுமுறையை இவ் விதழ் முயற்சி செய்துள்ளது. சமுதாய முன்னேற்றம் தொடர்

பான ஒரு வினாவை 10 நபர்களிடம் கேட்டு, அவர்களது பதிலை இதழில் வரிசைப்படுத்தி வெளியிடுதல். இது மக்களது பன்முகத் தன்மையை சுட்டிக் காட்டுவதாக உள்ளது. இதழ் பல புதிய எழுத்தாளர்களை உற்சாக மூட்டி, படைப்பாளி களாக்கியுள்ளது.

□ **திரட்டு.** நல்ல இலக்கியத்தை வளர்ப்போம், நசிவு இலக் கியத்தை ஒழிப்போம் என்று அரசியல், சமூக, இலக்கிய இயக் கங்களில் இடைவிடாது பாடுபட்ட இதழாளர் / எழுத்தாளர்/ செயல் வீரர் அமரர் ஜீவா அவர்களது நினைவுக் குறிப்பு ஒவ்வொரு இதழிலும். தொடரும் என்ற அறிவிப்புடன் இவ் விதழ் நா. தர்மராஜன் முயற்சியால் சிவகங்கையிலிருந்து, காலாண்டிதழாக ஜூன் 95-ல் தொடங்கப்பட்டது. வெளியான ஒரு இதழில் அனைத்துமே மறு பிரசுரமாக குமுதம், ஜனசக்தி, அன்னம் வெளியிடான சேதாரம்—இவைகளில் எடுக்கப்பட்ட வைகளே. இதழில் வெளியாகியுள்ள தமிழ்ச் சித்தர்கள் கைலாசபதி கருத்துக்கள் எனத் தரமான இரு ஆய்வுக் கட்டு ரைகள் உள்ளன. தேசியபுத்தக நிறுவனத் தலைவர் அழிக் கோடு சுகுமாரன் அவர்களது பேச்சுத் திறனை இதன்வழி அறியமுடிகிறது.

□ **தூவல்.** வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்ற குறிப்புடன் ஆசிரியர் சூர்ய குமாரன் அவர்களால் நவம்பர் 95-ல் இந்த மாத இதழ் தொடங்கப்பட்டது. அணு அஞ்சல் அட்டையிதழின் ஆசிரியர் இதன் இணையாசிரியர். ஆசிரியரின் இரு கவிதைகள், ஓ, என் அம்மா சிறுகதை வெளியாகியுள்ளது. தமிழக தினசரிகள் பற்றிய செய்திகள், பம்பாய் / கருத்தம்மா பற்றிய அலசல் கவிதைத் துளிகள் எனப்புதுக்கவிதை. சோசலிஸ்ட்யதார்த்த வாதம் பற்றி முகவை. கோ. சண்முகம். சமுதாயச்சிதைவு

சிர்காழி இராம மிருத **ரங்கநாதன்** படக் கதை: உருவா கிறது. ஜூலை 1996 நூலகம் இலக்கியம் மாத இதழில் வெளி வரும்.

பற்றி அட்சயன், வேம்பின் விதைகள் பற்றி அணு ஆசிரியர், சுதந்திர தேவி சிலையைப் பற்றிய குறிப்பு எனப்பல செய்திகள் வெளியாகியுள்ளன.

□ **தோழி** இதழிலுள்ள படங்கள் ஒளிப்படப்பிரதியிலும், செய்திகள் அச்சிலும், வெளியாகியுள்ளன. பெண்கள் முன்னேற்றத்திற்காக அக்டோபர் 15-ல் ஆரம்பிக்கப்பட்டு, இரண்டு இதழ்களை வெளிளிட்டுள்ளது. இரவல் சுகம் அம்மாவுக்கு ஒரு கடிதம், இரண்டு கதைகளை ஆசிரியர் நீலா எழுதியுள்ளார். அழகு நலக் குறிப்பு, மூச்சு பற்றிய கட்டுரைகள் உள்ளன. சிற்பிகளின் குரல் என வாசகர் கடிதங்களை வெளியிட்டுள்ளது. மக்களாட்சி / குருதிப்புனல் சினிமா விமர்சனம் செய்துள்ளது. குறைந்தபக்கமானாலும் வீரியமுள்ள இதழ்.

□ **நிலா**, தி. ஞா. தொல்காப்பியன் அவர்களால் மறைமலை நகரிலிருந்து ஏப்ரல் 95-ல் ஆரம்பிக்கப்பட்டு 2 இதழ்கள் வந்துள்ளன.

□ **தமிழ் மண்**. காலாண்டிதழ் மலேசிய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் இந்த இலவச ஏடு வெளியிடப்படுகிறது தஞ்சாவூரில் இதன்கிளை உள்ளது. பேராசிரியர். இர. ந. வீரப்பனார் இவ்விதழின் ஆசிரியர். உலகம் முழுவதும் வாழுகிற தமிழர்கள்—அவர்களது அமைப்புகள் மற்றும் செயல்பாட்டினைக் குறிப்பிட்டு, அவர்களை ஒன்றிணைப்பது இதன் தலையாய பணியாக உள்ளது. இதற்காக இவ்விதழாளரின் 'தொடர் பயணம்' குறிப்பிடத்தக்கது, சென்ற மாதம் இவரது பயணம் தமிழகம் / அந்தமான் தீவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிகரமாக நடந்தது.

புதிய வரவு—விமர்சன பகுதிகளுக்கு புதிய புத்தகங்களை அனுப்பி உதவுங்கள்.

நூலகம் இலக்கியம்
6, மு.வ. தெரு, அரும்பாக்கம் சென்னை—600 106.
தொலை பேசி: 484 5034.

□ **நுணுக்குக்காட்டி.** புரட்டாதி 95-ல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழிது. தமிழ் மக்களின் அரசியல், போராட்ட வரலாற்று நிகழ்வுகள் அவை பற்றிய இலங்கை இதழாளாளர்கள் அரசியல் வாதிகள் / பிரபல்யங்கள், தமிழக அரசியல்வாதிகள் எனப்பலரின் கருத்துக்கள்: போன்றவற்றை மிகச்சிறப்பாக இது பதிவாக்கியுள்ளது 10 அல்லது 15வரிகளுக்கு மேற்படாத இதன் ஒவ்வொரு குறிப்பும் பிரச்சனைகளை, போராட்ட நிர்பந்தத்தை விளக்குவதாக உள்ளது.

□ சிறப்புப்பாராட்டுப் பெறும் வெளிநாட்டு இதழ்□ □ஈழமுரசு□ 1995-ல் பாரிசிலிருந்து தொடங்கப்பட்ட இவ்விதழ் 34 பக்கங்களில் வார இதழாக 42 இதழ்களை வெளியிட்டுள்ளது. சாதாரண செய்தி இதழாக மட்டுமல்லாது, கலை. இலக்கிய இதழாகவும். இலங்கைப் பிரச்சனைகளைச் சரியாகச் சொல்லுகிற துலாக்கோலாகவும், புலம் பெயர்ந்து வாழுகிற தமிழ் மக்களுக்கிடையிலான தொடர்பு இதழாகவும் இந்த இதழ் மலர்ந்து வருகிறது. இவ்விதழ் உண்மைச் செய்திகளையும், துணுக்குகளையும், பல்வேறு தலைப்புகளில் தொடர்களையும், கதை கவிதை, நாடகத்திற்கான சிறப்புப் பங்களிப்பையும் செய்துவருகிறது இதன் தலையங்கங்கள் கூர்மையானவை— சமகால நிகழ்வுப் பகுதி விமர்சனத்திற்கு சாட்சிகளாக இருப்பவைகள். நுட்பமான படங்களுடன் கூடிய இதன் கட்டுரைகள்- தமிழ் மக்களை உற்சாக மூட்டி இயங்க வைக்கும் திறனுடையவைகள்.

□ சி.செ. நூலகத்தில் இன்றுவரை சேர்ந்துள்ள இதழ்கள் □
□1970 வகையான தமிழ்ச் சிற்றிதழ்கள் □
□நன்றி சிற்றிதழ்ச் செய்தி ஆய்விதழ் ஜனவரி 96 □

புதிய தொடர்—விரைவில்
ரங்காதன் காவியம்
கவிஞர் எழுதுகிறார்

'நிழல் கோபுரம்'



'ராஜ்' என்கிற புனைப்பெயரில் எழுதிவரும் ஏ.வி. ராஜ கோபால் எழுதிய 15 சிறுகதைகளை உள்ளடக்கியத் தொகுப்பு இது.

கணக்குத் தணிக்கையாளர் (ஆடிட்டர்) தொழில் செய்பவ ரான இத் தொகுப்பின் ஆசிரியர் ராஜ், 15 சிறுகதைகளையும் வெவ்வேறு கோணத்தில் சிந்தித்து, எடுத்துக்கொண்ட கருத் தையும், சொல்ல நினைத்த நியாய உணர்வுகளையும், பாகு பாடுகளையும் மிகத் தெளிவான முறையில் உள்ளத்தில் தைக்கும் வகையில் சொல்லி இருக்கிறார்.

திரைப்பட திறனாய்வு சங்கத்தின் பொது காரியதரிசி Federation of Film Societies of India- என்கிற தேசிய அமைப் பின் மத்திய குழு உறுப்பினராகவும் 'ராஜ்' இருப்பதினால் என்னவோ கதைகளில், காட்சி அமைப்புகளில் 'ஷாட் பை ஷாட்' விவரித்திருப்பது இயல்பாகவே அமைந்திருக்கிறது. அதனால் கதையைப் படிக்கும் வாசகரே 'விஷு'வலாக

(கற்பனையில்) பார்த்துக் கொள்ள ஏதுவாக 'டெக்னிக்'காக எழுதி இருக்கிறார்.

'ராஜ்' எழுத்தில் பக்குவம் காணப்படுகிறது. எடுத்துக் கொண்ட கருவிலும்— சொல்லும் நடையிலும் விரசத்தின் மேற்பூச்சோ அர்த்தத்திற்குள் அர்த்தத்தைப் பார்க்கும் 'செக்ஸ்' வக்கனையோ இல்லை.

தணிக்கையின் வரம்பிற்குள்ளும், தன்மான உணர்வு களிலும் வரம்பை மீறாமல், 15 சிறுகதைகளிலும் மனித நேய உணர்வுகளை, ஆறறிவு மனிதப் பாத்திரத்தின் மூலம், மூன்றறிவு, ஐந்தறிவு ஜிவராசிகளின் பாத்திர ஏக்கத்தின் மூலம், நாசூக்காக, நயம்பட கூறி இருக்கிறார்.

வெளிநாட்டில் வாழும் தமிழன், தமிழின்பால், தமிழ் மண்ணின் மேல் கொள்ளும் நாட்டத்தையும் இங்கேயேத் தின்று கொட்டைப் போட்ட தமிழனின் இன்றைய நிலைமை யும்... 'நிழல் கோபுரம்' சிறுகதையில் நயமாக எடுத்துக்காட்டி, நாகரீகமாக எல்லார் (தமிழன்) தலையிலும் குட்டுகிறார்.

ஒரு பெண்ணின் நுண்ணிய உணர்வுகள் எதிர்பாராத விதமாக பாதிப்புக்குள்ளானால். அவரின் தொடர் மனநிலை, விரக்தியின் எல்லை எது என்பதை 'உயிரோவியம்' கதையில் தொட்டுக் காட்டுகிறார்.

முத்தோரின் தாம்பத்ய வாழ்வு, அன்பு, நடுக்கடலைப் போன்றது; ஆழமானது. அமைதியானது. இளசுகளின் தாம்பத்ய வாழ்வு, உறவுகள், கடலின் விளிம்பில் உள்ள அலைகள் போன்றவை, ஆழமற்றவை. சத்தம் மட்டுமே செய் பவை, 'நடுக்கடல் ஆழம்' 'ராஜ்' கொடுத்துள்ள விளக்கத் திற்கு மேலாக இனியாராலும் தெளிவாகக் சொல்ல முடியாது.

ஒருதலைப் பட்சமாக சிந்தித்து, தவறான கருத்துக் மனதில் இடம் கொடுத்துவிடும் மனோதத்துவ ஆய்வாளருக்கு அவர் மகன் அளிக்கும் விளக்கம்... 'குழந்தைகளுக்கும் மனிதத் தன்மை உண்டு. அது வளர்ந்து மனிதனானதும் தான் அதற்கு

மனிதத்தன்மை வருகிறது'— என்பது 'பேத்தல்' என ஆதார பூர்வமாக எடுத்துச் சொல்லி மனோதத்துவ ஆய்வாளருக்கும் மட்டுமல்ல நமக்கும் சேர்த்து இக்கால குழந்தைகளின் அறிவு கூர்மைக்கு மக(ா)ன் கதையில் கட்டியம் கூறுகிறார் 'ராஜ்'.

''உயிர் தமிழுக்கு, உடல் மண்ணனுக்கு'' என்று அறை கூவல் விடுவோரில் பலர் பிழைப்பிற்காக மொழி வியாபாரம் செய்பவர்கள் என்பதை 'கவுரிமான்' கதையில் 'ராஜ்' தன் பேனாவிலேயே தோலுரித்துக் காட்டுகிறார்.

''பாசச்கயிறு'' ''ஆறறிவு மிருகம்'' ஆகிய கதைகள் மூலம் வாழும் உயிர்களில் மற்ற ஜீவராசிகளைவிட மிகவும் கொடூரமானது மனித இனம் தான்... 'ராஜிற்குமட்டும் ஏற்புடைய... தவறு, நம் எல்லார்க்கும் ஏற்புடைய கருத்தை அம்புகளாக்கி, சமூதாயத்தார் மீதே ஏவி இருக் கிறார்.

''ஒற்றை ரோஜா'', ''பார்வை நேரம்,'' ''மல்லிகை முள்'' இவைகளைத் தொடர்ந்து ''நிழல்கோபுரம்''— 'ராஜி'ன் நான்காம் கதைத் தொகுப்பு.

உத்திரப் பிரதேச மாநில அரசின் பரிசு, பாரதஸ்டேட் வங்கியின் பரிசு, தமிழக அரசின் பரிசு—என 'ராஜி'ன் முதல் மூன்று நூல்களும் பரிசை வென்றிருந்தபோதும், ''நிழல் கோபுரம்'' வெளியீட்டுவிழாவன்றே 1000 பிரதிகளை சங்கப் பலகை' வாங்கும் என்கிற தகுதியைப் பெற்றிருக்கிறது.

'ராஜி'ன் எழுத்திற்கு மகுடம் சூட்டப்பட்டுள்ளது. அவரின் எழுத்தின் தர உயர்வுக்கு இதைவிட வேறு சான்று என்னவேண்டும்?

Residence
14. வன்னியர் தெரு,
போஸ்ட் ஆபீஸ் மாடியில்,
போரூர், சென்னை-600 116

—எம்.கே. மோகன் சுந்தர்
(Press Relation& Media Executive)
'சங்கப் பலகை'
சென்னை-96.

'எழுத்தாளர்களுக்கு ஏற்றமிகு காலம்'!

எம். கே. மோகன்சுந்தர்

பத்திரிகை உலகுக்கும், பொழுதுபோக்கு மீடியா வளர்ச்சிக்கும் பெரும் போட்டி நடைபெறும் காலம் இது

எழுத்தாளனின் படைப்புகள் இந்த இரண்டு துறைகளுக்கும் மிக, மிக அவசியம்.

அனுபவ எழுத்தாளனிலிருந்து, அறிமுகமாகும் எழுத்தாளன் வரை, இவைகள் வெளிச்சத்திற்குக்கொண்டு வருவதற்கான சாத்திய கூறுகள் அதிகமாக விட்டது.

இந்த வகையில் பார்க்கும்போதும் எழுத்தாளர்களின் பெருக்கமும், நாளும் அதிகரிக்கத்தான் செய்கிறது.

இவர்களில் சகட்டுமேனிக்காக எழுதினேன், பொழுது போக்குக்காக எழுதினேன் என கூறுபவர்களை விட, "என்னுடைய பிழைப்பே எழுத்தில் தாங்க..." என்போர் "இலை மறைவு காயாக" வியப்பித்து இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

டாக்டராக, இன்ஜினியராக தொழில் செய்கிறேன் என அந்தந்த துறையில் கூறிகொள்பவர்களைப் போல, எழுத்தைத் தொழிலாகக் கொண்ட எழுத்தாளன் நான்... என பகிரங்கமாகச் சொல்லிக் கொள்ள முடியாத நிலை.

எழுதி அனுப்பிய தன்னுடைய படைப்பு பத்திரிகையில் பிரசுரமாகி அன்பளிப்பு கிடைக்குமா?... மீடியாவில் தேர்வு பெற்று பல ஆயிரம் கிடைக்குமா?... அல்லது பிரசுரித்த பதிப்பகத்தாரிடமிருந்து 'ராயல்டி' வருமா என, இவைகளை சார்ந்தே இருக்க லேண்டிய எழுத்தாளனின் நிலை மாற வேண்டும்.

முதலீடு, மற்றும் பொருளாதார உயர்வு எழுத்தாளனுக்குக் கிடைக்குமானால், பிறரை சார்ந்திருக்கவேண்டிய

நிலையிலிருந்து, சுயத்தொழில் செய்பவனாக எழுத்தாளன் மாற முடியும்.

முதலீடு அல்லது நிதியை எழுத்தாளனுக்கு வங்கி அளிக்க வேண்டும் அல்லது எழுத்தாளன் வளர்ச்சியின்பால் ஆர்வங் காட்டக் கூடிய அமைப்புகள் இவ்விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இவைகளை எல்லாம் கூட்டி, கழித்து, எழுத்தாளர் களுக்கு வெளிச்சமான பாதையைக் காட்ட உருவாகியுள்ள 'சங்கப்பலகை'— எழுத்தாளர்களின் 'கைக்கு எட்டும் கனி' அதற்கும் மேலாக ஒரு வரபிரசாதம் என்றே கூடச் சொல்ல லாம்.

'சங்கப்பலகை' நடத்தும் மாதாந்திர கூட்டங்கள் ஆய்வுப் பட்டறைகள் செயல் விரிவாக்க பணிகள் இந்நோக்கைப் பின்னி பிணைந்தே செயல்படுகிறது என்பதை சமீபத்திய ஆய்வுப்பட்டறை முத்தாய்ப்பாகக் காட்டுகிறது.

'எழுத்தாளரை வங்கிகள் சுய தொழில் செய்யவராக அங்கரிக்க என்ன செய்யவேண்டும்?' என்பதை தலைப்பாகக் கொண்டு, சமீபத்தில் நடைபெற்ற ஆய்வுப்பட்டறைக்கு டாக்டர் எம் கோபாலகிருஷ்ணன், (முன்னாள் தலைவர், இந்தியன் வங்கி) தலைமை தாங்கினார். டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் தலைவர், நிர்வாக இயக்குநர் 'சங்கப் பலகை' எஸ், போஸ், கூடுதல் கமிஷனர் வருமானவரி துறை, ஏ.வி ராஜ கோபால் ஆடிட்டர், திரைப்பட தணிக்கை குழு உறுப்பினர் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

- ☐ சுயமாக புத்தகத்தை வெளியிட விரும்பும் எழுத்தாளன், தன்னுடைய படைப்பை 'சங்கப் பலகை'யின் பரிசீலனைக்கு' அனுப்பி வைக்க வேண்டும்.
- ☐ படைப்பு எத்துறையைச் சார்ந்ததோ, அத்துறையைச் சேர்ந்த ஆய்வுக்குழு பரிசீலனை செய்யும்.
- ☐ பதிப்பித்து வெளியிட, சங்கப்பலகையில் தேர்வு பெறும் படைப்பின் எழுத்தாளருக்கு, 1000 பிரதிகளுக்கான 'பர்ச்சேஸ் ஆர்டரை, சங்கப்பலகை அளிக்கும்.

☐ 'சங்கப் பலகையின்' 'பர்ச்சேஸ் ஆர்ட்'ருடன்' அச்சகத் தாரிடமிருந்து பெறும் 'கொடேஷனை'யும் இணைத்து அனுப்பும் எழுத்தாளருக்கு, வங்கிகள் கடன் உதவி, நூறு சதவீதம் செய்ய வேண்டும் என்கிற தீர்மானம் முடிவு செய்யப்பட்டது.

☐ வங்கிகளோடுத் தொடர்புக் கொண்டு, இக்கடன் உதவி திட்டத்தை அமுல் படுத்த டாக்டர். எம். கோபால கிருஷ்ணன் அவர்களை 'கன்வீன'ராகக் கொண்ட 'ஆத்தர் பப்ளிஷர் புரோமோஷன் கவுன்சில்' 'சங்கப்பலகை'யில் உருவாகியுள்ளது.

☐ ஆட்சிக்கலை, அறிவியல், குழந்தை கல்வி, இலக்கியம், இத்துறைகளுக்கான ஆய்வுப்பட்டறைகளை, முறையே ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடத்துவது என முடிவுச் செய்யப்பட்டது.

அதற்கான 'கன்வீனர்'களையும் தேர்வுச் செய்து பொறுப்பை ஒப்படைத்த டாக்டர் அப்பாஸ் இப்ராகிம், செயலாக்க வேகத்தில் 'சங்கப் பலகை' மெருகேறுகிறது

—எம்.கே. மோகன் சுந்தர்

நூலகம் இலக்கியம் மாத இதழுக்கு ரூ. 1000 கொடுத்து ஆதரவு கொடுங்கள்,

நூலகம் இலக்கியம் மாத இதழுக்கு ரூ. 120/- ஆண்டு சந்தா செலுத்தி தொடர்ந்து படிங்கள்.

சாதனை

தமிழக பொது நூலகத் துறை 1995. ஓராண்டு சாதனைகள் மார்ச் 1996 நூலகம் இலக்கியம் மாத இதழில் படிக்கத் தவறா தீர்கள்.

புத்தகப் பிரியர்களே!

சுற்றுலாவுக்கு வருக!

சென்னை தீவுத் திடலில் ஸ்டால் எண் 5இல்
புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

பங்கேற்போர்

திரு. இராமலிங்கம் — நர்மதா பதிப்பகம்.
திரு. ரா. சினிவாசன் — அணியகம்
திரு. M. சம்ஸுதீன் — வெளிநாட்டு நூல்கள்.
திரு. A.G.S. மணி — குழந்தைகள் உலகம்.
குழந்தைகளுக்கான எல்லா பதிப்பாளர்களின் நல்ல நூல்கள் இங்கு விற்கப்படுகின்றன.
திரு. S. இராமலிங்கம் — சிறுவர்களுகாக

Audio, Video, Teaching Aids Librrary நடத்த முன் வந்துள்ளார்.

டாக்டர். A. அப்பாஸ் இப்ராகிம். சங்கப்பலகை நிறுவனர் முயற்சி வெல்க.

வாசர்களுக்கு நல்ல நூல்கள் விநியோகிக்கும்
பொறுப்பை ஏற்றுள்ளார். முயற்சி வெல்க!
வீட்டுற்கொரு நூலகம் அமைப்போம்!
வகுப்புற்கொரு நூலகம் உருவாக்குவோம்!
வீதிக்கொரு வாசகசாலை நிறுவுவோம்!
உங்கள் தேவைக்கு தொடர்பு கொள்க.

BOOK WORLD

(Audio- Video- Teachiug Aids For Nursery Schools)
6, Poes Road.
M M. Garden
V. Teynampet
451067

6, Francis Joseph St.
(Near Y.M.C.A. Broad way)
MADRAS-1

'B' 'பு'

பேராசிரியர் **தங்க சிகாமணி.**
57. சானகிராம் காலனி,
அரும்பாக்கம் சென்னை— 106.
தொலை பேசி. 4836477

'B'

'B' is for a book!
The book is fine to look!
Look and say a word.
Learn and Write about the World.

பு

'பு' என்றாலே புத்தகம்.
புத்தகம் கருத்துப் பெட்டகம்.
பார்த்த சொல்லைப் படிக்க.
படித்து உலகை அறிக.
கண்ட வார்த்தையைக் கற்க.
கற்று உலகை அறிக.

கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம்

சென்னை அண்ணா நகர் விஸ்வேஸ்வரய்யா கோபுர பூங்காவுக்கு நடைபயிற்சிக்காக வருகையளிப்போருக்கு கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம் நிறுவனரும், கல்லூரிக் கல்வி முன்னாள் இணை இயக்குநரும் பேராசிரியர் திருக்குறள் க. பாஸ்கரன் ஒவ்வொரு நாளும் ஒரு திருக்குறளையும் பொருள் விளக்கத்தை தமிழிலும் ஆங்கிலத்திலும் கூறுகிறார். கடந்த இரண்டு ஆண்டுகளாக திருக்குறள் பணியில் பேராசிரியர் ஈடுபடுகிறார். கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம் நுழை வாயிலின் முகப்பில், கரும்பலகை மூலம் அத்திருக்குறளையும் அதன் பொருளையும் அறிவிக்கிறார். 16 1.96 அன்று காலை சென்னை அண்ணா நகர் விஸ்வேஸ்வரய்யா கோபுர பூங்காவில் திருவள்ளுவர் திருநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. அன்று 768-ஆம் திருக்குறளை பொருள் விளக்கத்துடன் பேராசிரியர் கூறினார். திருக்குறள் போட்டி நடைபெற்றது. திருவாளர்கள் மு. துரை ராசன், ஏகாம்பரம், சங்கரசுப்பையன், மணிவண்ணன், வி.சி. பெருமாள் உள்பட பலரும் திறக்குறள் போட்டியில் பங்கேற்றனர். ஒருவர் ஒரு திருக்குறளை மட்டும் கூறவேண்டும். அவர் உரைத்த திருக்குறளை மீண்டும் பிறர் கூறக் கூடாது. கருணாகரன் நினைவு ஆதரவில். பேராசிரியர் திருக்குறள் பாஸ்கரன் திருக்குறள் போட்டியில் பங்கேற்ற 25 பெரியோர்களுக்கு திருக்குறள் நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். திரு.வி.கே. செல்லதுரை அனைவருக்கும் இனிப்புக்களை வழங்கி வரவேற்றார்.

நூலகக் கல்வி

தமிழ் நாட்டில் நூலக தகவல் அறிவியல் கல்வி: ஒரு கண்ணோட்டம் வரும் 1996 நூலகம் இலக்கியம் இதழ்களில் இடம் பெறும்.

நூலகத்தந்தை எஸ். ஆர். ரங்கநாதன்



வாழ்க்கை சரிதத்தை முழுமையாக எழுத வேண்டுமானால், சரிதம் எழுத நாயகனாக எடுத்துக்கொள்ளும் முக்கியஸ்தர் எத்துறையைச் சேர்ந்தவரோ, அதேத் துறையைச் சேர்ந்தவரே அந்நூலாசிரியராக இருக்க வேண்டும்.

அப்படியே அமைந்துவிடுமானால் அதிமுக்கியமான விஷயங்களை, தேவையையும், முக்கியத்தையும் அறிந்து எந்த தலைப்பின் கீழ் முழுமையான பரிணாமத்தோடு அளிக்கலாம் என்பதெல்லாம் நூலாசிரியருக்கு இயல்பாகவே வந்துவிடும்.

சுருங்கச் சொல்லி, பெரும் உண்மைகளை எளிதில் வாசகர் களுக்குப் புரிய வைத்துவிட முடியும்.

இவ்வகையில் புதுச்சேரி, ரோமன் ரோலண்டு நூலகத்தின் நூலகர் கே. சௌந்தர்ராஜன் எழுதியுள்ள நூலகத் தந்தை; எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களைப் பற்றிய வாழ்க்கை (வரலாறு) குறிப்பாகும்.

சீர்காழி ராமமிருதம் ரங்கநாதன் என்கிற எஸ். ஆர். ரங்கநாதன், தமிழகத்தின் சிற்றூரில் பிறந்து எளிமையாக வாழ்ந்து, படிப்படியாகப் படித்து, ஆசிரியராக, நூலகராக உலக முழுவதும் போற்றக் கூடிய வகையில் நூலகத் தந்தை என்கிற அடைமொழியின் உயர்வுக்குரியவராய் எப்படி உயர்ந்தார், வாழ்ந்தார் என்பதை நூலாசிரியர் மிக எளிமை யான சொற்றொடர்களின் மூலம் மிகத் தெளிவாக எழுதி இருக்கிறார்.

கணிதத்தில் முதுகலைப்பட்டம் பெற்று. ஆசையினால் ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து தன்னை ஒரு ஆசிரியனாக ஆக்கிக்கொண்டவர் எஸ் ஆர். ரங்கநாதன் பிறகு, சென்னைப் பல்கலைக் கழக முதல் இந்திய முழுநேர நூலகர் என்னும் பொறுப்பேற்றார். அதுவே பின்னாளில் நூலகத் தந்தை என அவரை குறிப்பிட்டு அழைக்கும் நிலைக்கு உயர்த்தியது.

இந்திய மக்களின் அறிவு வளர்ச்சிக்கு நூலகங்கள் தேவை. அதற்கு நூலகர்களும் தேவை. நூலக இயல் பற்றிய நூல்களும் அதிகம் தேவை என்பதை தீர்க்கதரிசனமாக உணர்ந்த எஸ். ஆர். ரங்கநாதன் நூலகங்களுக்கான விதி முறைகளை எழுதியதால் உலக நாடுகளின் பாராட்டுதல்களையும் பட்டங் களையும் பெற்றார்.

புத்தகங்களை வகைப்படுத்துவதற்கு உலக நூலகங்களில் பயன்படுத்துவது 'தசம முறை' என்கிற, 'டெசிமல் கிளேசி பிகேஷன்' முறையே. எஸ். ஆர். ரங்கநாதன் கோலன் பகுப்பு முறையை (Colon classification) கண்டுபிடித்து அளித்தவர்

உலக நூலகங்கள் இன்னும் இவரின் கோலன் பகுப்பு முறையை பின்பற்றுகின்றன.

இந்தியாவில் முதன் முதலாக நூலக இயல் பாடத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பான எம் லிப்ஃஎஸ்ஸினை தொடங்கியவரும் இவரே

நூலக இயலில் டாக்டர் ரங்கநாதன் செய்த சாதனைகள், அடைந்த உயர்வுகள், அனைத்தையும் விவரிக்கும் இந்நூல் இந்திய மாணவர்கள் மற்றும் நூலகர்கள் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய அதி அவசியமான நூலாகும்.

நூல்விலை 21- 109 பக்கங்கள்
சேகர் பதிப்பகம்
66. பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர்—சென்னை-600 078.

எம். கே. மோகன் சுந்தர்

'அனுபவ அறிவு பெற குழந்தைகளுக்கு நூலகம் அவசியம்!'

எம். கே. மோகன் சுந்தர்.

எல்.கே.ஜி. முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் ஆங்கிலம் மீடியம் சிறுவர், சிறுமிகளுக்கான இலக்கணம் மற்றும் அதன் உபயோகம் பற்றிய ஆய்வுப்பட்டறையை, 'க்ரைஸ்ட் சர்ச் ஆங்கிலோ இண்டியன் ஹையர் செக்கண்டரி பள்ளி வளாகத்தில் குழந்தைகள் உலக இயக்கம் (Childrens World Society) சமீபத்தில் நடத்தியது.

குமுமியிருந்த ஆங்கில பள்ளி ஆசிரியர்களுக்கு விளையாட்டு முறையில் மிக எளிமையாக இலக்கணத்தையும், அதன் உபயோகத்தையும் குழந்தைகளுக்கு எப்படி எடுத்துச் சொல்லி, விளக்க வேண்டும் என்பதை அதன் பள்ளி தலைமை ஆசிரியர் கே. ஜான் ஃப்ரெடி போதித்தார்.

ஏ. ஜி எஸ், மணி, குழந்தைகள் பாட சம்மந்தமான புத்தகங்கள், ஆடியோ மற்றும் வீடியோ, கல்வி உபகரணங்கள். அடங்கிய கண்காட்சியை நடத்தினார்.

'சங்கப்பலகை' அமைப்பின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான டாக்டர் அப்பாஸ் இப்ராகிம், 'உதவிக்கரம்' ஆசிரியர் ஜி. முத்து, டாக்டர் பி. பெருமாள் (நூலகர் கவர்னர் காரியாலயம், ராஜ்பவன்) ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வகுப்பு நூலகம், ஆசிரியர்களின் நூலகம் இவைகளின் நிறை, குறைகளைப் பற்றி பேசிய டாக்டர் அப்பாஸ் இப்ராகிம், 'பேப்பர் ஏஜிலிருந்து எலக்ட்ரானிக் மீடியாவுக்கு இன்று நூலகம் போய் கொண்டிருக்கிறது என்பதை சுட்டி காட்டினார்.

ஆசியரின் போதனைகள் மட்டும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்குப் போதாது. விழிப்புணர்வும், அனுபவ அறிவும் குழந்தைகள் பெற நூலகம் மட்டுமே உதவ முடியும்.

குழந்தைகளின் நல்ல எதிர்காலத்திற்கு, வழிகாட்டுதலாக இது இருக்குமென கூறினார்.

இதனை கருத்தில் கொண்டே தான் 'சங்கப்பலகை'யை ஆரம்பித்திருப்பதாகவும், அது தமிழில் வெளிவரும் சூழந்தைகளுக்கானப் புத்தங்கங்களை வாங்கி ஊக்குவிக்கும் என்பதோடு, இது தொடர்பாக நடத்தப்படும் குழந்தைக்கல்வி' ஆய்வுப்பட்டறைக்கும் ஆலோசனைகள் கூறி, வழி நடத்தும்— என டாக்டர், அப்பாஸ் இப்ராகிம் கூறினார்.

ஜி முத்து உதவிக்கரம் ஆசிரியர், தான் சமீபத்தில் வெளி நாடு சென்று திரும்பிய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

நூலக ஞானி டாக்டர். பா, பெருமாள், நூலகத்தின் அடிப்படை விதிமுறைகளையும், நூலகத்தந்தை டாக்டர். எஸ், ஆர். ரங்கநாதன் அவர்களின் சித்தாந்தங்களையும் குழுமியிருந்த ஆசிரியை பெருமக்களுக்கு விளக்கினார்.

எம்.கே. மோகன்சுந்தர்

மதிப்புரை

யோகி ராம்சுரத்குமார்

என் இனிய பாலாவிற்கு அநேக நமஸ்காரங்கள். நலம். தங்கள் நலமும் சுற்றத்தார் நலமும் அறிய விருப்பம். தெரியப் படுத்தவும். பல்சுவை நாவலில் தாங்கள் எழுதிய மீட்டாத வீணையைப் படித்தேன். சிறிய, மெல்லிய நூலிழை போன்ற கருவைக் கொண்டு விதியின் விமர்சனத்தை விவரமாய் சொல்லுகின்ற பக்குவம் உங்களுக்கே உரியது. அற்புதமாய் எழுதியிருந்தீர்கள். அதை விமர்சனம் செய்ய எனது திற்றறி வுக்கு தகுதி இல்லை. அத்தோடு ஜரிகைக் கனவுகள் என்கின்ற சினிமாவில் நுழைவதைந் பற்றி தொடர் கட்டுரை எழுதுகிறீர் கள். நல்லது மாத நாவலில் கட்டுரை இல்லை எதை எழுதி னாலும் படிப்போம். எழுதுங்கள், தாங்கள் நிறைய எழுத்துங் கள். இடைவிடாது எழுத இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

தமிழரசியில் திருப்பூந்துருத்தி தொடர் எழுதி முடித்துள் ளீர்கள். அது புத்தகமாக வெளிவந்தவுடன் பொக்கிஷமாக பாதுகாத்து வைக்க எனக்கு எண்ணம்.

எழும்பூர் ரயில்நிலையத்தில் ஒரு முப்பத்தைந்து வயது இளைஞரைப்பற்றி சொன்னீர்கள். அவருக்கு பதிலாக நான் முதலில் மன்னிப்பு கேட்கின்றேன். உங்கள் கடிதம் இந்த வாசகர்களுக்கு ஞானபீட பரிசு. அதனால் தான் அப்படி வற்புறுத்துகிறார்கள். உங்களுடைய எண்ணமும் புரிகிறது.

வகையாய் நெஞ்சிலிருந்து நெஞ்சத்தைத் தொட ஆசை என்கின்ற இந்த ஆசையே போதும் பாலா நாவலிலே தாராள மாய் பேசுங்கள் கடிதம் எழுதத் தோன்றினால் தவிர எழுத வேண்டாம்..... பிரியமுடன் கோ. அன்பழகன்.

புதிய வரவு

விசா பப்ளிகேஷன்ஸ், போன். 434 2899
55, வெங்கட் நாராயணா சாலை
தியாகராய நகர் சென்னை-600 017.

- ☐ **பால குமாரனின் புதிய நாவல்கள்**
- ☐ **மீட்டாத வீணை** நவம்பர், 1995. ப. 255, ரூ. 45.
- ☐ **பெரிய புராணக் கதைகள்** செப்டம்பர் 1995, ப. 272. ரூ. 43.
- ☐ **அன்பு நெஞ்சம்.** சா. மாணிக்கவாசகம். ஜனவரி, 1995, ப. 193 ரூ. 30 திருமகள் நிலையம். சென்னை-600 017.
- ☐ **இலக்கிய சுவடுகள்.** முனைவர் இரா. குமரவேலன், முதலியோர், டிசம்பர் 1995. ப. 120. ரூ. 20. தமிழாய்வுக் கழகம் 14, இராமசாமிசாலை, டபுள் டேங் குடியிருப்பு, மாடல் ஹவுஸ், கலைஞர் கருணாநிதி நகர் சென்னை-600 078. கட்டுரைகள்.

கவிதா பப்ளி கேஷனஸ் தபால் பெட்டி எண். 6123
8, முத்து கிருஷ்ணன் தெரு,
பாண்டி பஜார், தியாகராய நகர்
சென்னை-600 017, போன். 827 0980.

- ☐ **பிரபஞ்சனின் புதிய படைப்புகள் வானம் வசப்படும்.** பதிப்பு 2 டிசம்பர் 1995, பதிப்பு 1. 1993. ப. 712. ரூ. 131. **சாகித்ய அகாதமி 1995 ஆண்டு பரிசு பெற்ற வரலாற்று நாவல்.**
- ☐ **காகித மலர்கள்**, டிசம்பர் 1995, ப. 172, ரூ. 32, கதை.
- ☐ **தீயிலே வளர் சோதி**, டிசம்பர் 1995, ப. 136, ரூ. 25.
- ☐ **''என் இளமைக் கால நினைவுகள்''** ஓஷோ, டிசம்பர், 1995 ப. 432, ரூ. 80.

மொழி பெயர்ப்பு. சுவாமி ஆனந்த பரமேஷ் உண்மை விளக்கம்.

- ☐ தந்தரா அனுபவம், நவம்பர் 1995. ப. 368. ரூ. 70. மொழி பெயர்ப்பு சுவாமி ஆனந்த் பரமேஷ் தந்தரா வழிபாடு.
- ☐ **'நுகர்வோர் பாதுகாப்பு'** டாக்டர் பாட்டாளி ஆ. பழனியப்பன எம். ஏ., எம். எல். பி. எச்டி. டிசம்பர் 1995. ப 168. ரூ. 30. நுகர் வோர் பாதுகாப்பு சட்ட விதிகள் கோட்பாடுகள். சேது அலமி பிரசுரம் 81 முத்துகிருஷ்ணன் தெரு, சென்னை-600 017.

அணிந்துரை

தமிழ் எழுத்துலகிற்கு அறிமுகமாகும் ஒரு புதிய முயற்சி இந்தப் படைப்பு. சில ஆண்டுகளுக்கு முன் இந்தக் கதையை எழுதினேன். அது என்னுடைய ஆத்ம திருப்திக்காக. அப்பொழுது, இஸ்ரேல்—பாலஸ்தீனர் பிரச்சனை ஒரு பெரும் போராட்டமாக இருந்தது. இப்பொழுது, அந்த பிரச்சனை முடிந்து விட்டது. இருவரும் ஒன்று சேர்ந்து வாழ முடிவு செய்து விட்டார்கள். இது போற்றத்தக்க ஒரு முடிவு.

இதுபோல உலகின் பல பாகங்களிலும் இன்னும், இனம், மற்றும் கோஷ்டிப் பூசல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் சுமுகமாக முடியவேண்டும் என்பதே என் விருப்பம். அப்பொழுதுதான், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கு அர்த்தமுள்ளதாக ஒலிக்கும்.

இந்தக் கதையைப் படித்த சில நண்பர்கள், இதை ஏன் வெளியிடவில்லை என்று கேட்டனர். அதன் பின்னர்தான் அந்த யோசனையே வந்தது. என்னுடைய வேலை இந்தியாவின் பல பாகங்களுக்கும் அழைத்துச் சென்றது. எனவே, இந்தக் கதையை வெளியீட்டாகக் அலுவலகத்தில் பணிபுரிவதால் இஸ்ரேல் பாலஸ்தீனியப் பிரச்சினைகளை அலசியிருக்கிறார். மற்றுமோர் இடத்தில் ஆங்கிலேயர்களைச் சாடி இருக்கிறார்.

அவர்கள் தேசத்தில் காலை எட்டு மணிக்கெல்லாம் பணியாற்றப் புறப்படுகிற அவர்கள் நம்நாட்டைக் கைப்பற்றிய பின் இங்கு பத்துமணி அலுவலகமாக்கி நம்மைச் சோம்பேறிகளாக்கி விட்டிருக்கிறார்கள் என்கிறார். சிந்திக்க வேண்டிய விஷயம்தான்.

இது போன்று நிறைய நாட்டு நடப்புக்களுக்காகக் காட்டு கின்ற அக்கறை தெரிகிறது. ஒரே மூச்சில் எழுதி முடித்திருக்கிற மாதிரி படுகிறது. 'ஒரே ஒரு ஊர்ல ஒரு ராஜாவாம்'... என்கிற பாணியை கைப்பற்டுயிருப்பது புரிகிறது.

இது இவருடைய முதல் முயற்சி. ஆரம்ப எழுத்து. சுய அனுபவம். அல்லது மற்றவர் அனுபவம் இவைகளால் பாதிக் கப்பட்டு உள்வாங்கிச் கொண்டு அந்தத் தவிப்பை எழுத்தாக்க வேண்டும் என்கிற துடிப்பு போகப் போக வந்துவிடும்.

முதல் கதை. முதல் புத்தகம். மோதிரக்கைக் குட்டு கிடைத்திருக்கிறது. திருமகள் நிலையம் வெளியிட்டிருக்கிறது. அப்பதிப்பகத்தில் மிகச்சிறந்த எழுத்தாளர்களின் புத்தகங் களை வெளியிட்டிருக்கிறார்கள் அப்பதிப்பகம் வெளியிட்ட தால் சிலர் மிகச் சிறந்த எழுத்தாளர்களாகவும் ஆகியிருக் கிறார்கள்.

இந்த இரண்டும் திரு. மாணிக்கவாசகத்திற்குக் கிட்ட வாழ்த்துக்களுடன்,

அன்புடன்

இந்துமதி

தமிழகப் பொது நூலகத் துறை: 1995 சாதனைகள்

நன்றி: மக்கள் குரல். சென்னை. 19.2.1996 பக்கம். 4.

- ☐ மதுரையில் முப்பெரும் விழா
- ☐ நூலகத்துறை வளர்ந்து கொண்டுதான் வருகிறது தமிழக பொது நூலகத்துறை இயக்குநர். திரு. இரா. கண்ணன் அவர்கள் பெருமிதம்.
- ☐ தேசிய நூலக விருது பெற்ற நூலகர் திரு. கிருஷ்ணனுக்குப் பாராட்டு.
- ☐ ஆயிரத்திற்கும் அதிகமாக புரவலர் களைச் சேர்த்த 17 பொது நூலகர் களுக்கு பாராட்டு.
- ☐ 20 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்த நூலகர், டிரைவர்களுக்கு விருது.
- ☐ நூலகம் இலக்கியம் மார்ச் இதழ் 1995 பொது நூலகத் துறையின்: 1995: ஓராண்டுச் சாதனை: சிறப்புக் கட்டுரையுடன் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் வெளியாகும்.

பிரபஞ்சன்

முன்னுரை

இந்தியக் கல்வித் திட்டத்தின் மேல், எனக்கு மரியாதை இல்லை. இந்தக் கல்வித் திட்டம், சுதந்திரம் பெற்று, முன்னேறத்துடிக்கும் ஒரு சுதந்திர நாட்டுக்குக் கிஞ்சித்தும் உதவும்படியாக இல்லை. சுதந்திரத்துக்குப் பிறகாவது, நம் தலைவர்கள் இந்தக் கல்வித் திட்டத்தை மாற்றியமைத்து, ஸ்வதேசிக் கல்வியைப் புகட்டி இருக்க வேண்டும் பதவிக்குப் போராடுவதற்கே அவர்களுக்கு நேரம் சரியாக இருந்தது. எதிர்காலத் தலைமுறையை அவர்கள் எவ்வளவுக்கும் சிந்திக்கத் தயாராக இல்லை.

அதன் விளைவே சமூகத்தில் இளைய தலைமுறையினரின் அவநம்பிக்கைப் போக்குகள், சகல ரௌடித் தனங்களும், இந்தப் பொறுப்பில்லாக் கல்வியின் பின் விளைவுகள்.

வெள்ளைக்காரர்கள் என்கிற விதேசிக்கலாச்சாரங்கள் பெற்றெடுத்த சவலைக் குழந்தையே, இன்றைய கல்வித் திட்டம். கீழ்நிலை குமாஸ்தாக்களை உருவாக்க என்றே திட்டமிடப்பட்ட கல்வி அது. சுதந்திரக் கல்வியை ஆக்ரமிப்பாளர்கள் தருவார்களா என்ன? தரார். வெள்ளைக்காரன் கல்வி, அடிமைகளை இலட்சியமாகக் கொண்டதெனில் எவரே மறுப்பார்.

1947-க்குப் பின்னரும், பழைய முறை உத்தியோக வேட்டைக் கல்வியையே நாம் கடைப்பிடிக்கிறோம் என்றால், நாம் அடிமைகள் அன்றி வேறென்ன?

நாம் ஏன் எளிய முறை, முற்றிலும் மனிதனின் பௌதீக மற்றும் ஆன்மீகத் தேவையை நிறைவேற்றும் கல்வியைச் சிந்திக்கக் கூடாது? சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே.

திட்டம் இடம் நம்மிடம் இல்லை.

விலங்கியல் படித்துவிட்டு, வங்கியில் கூட்டல் கழித்தல் கணக்குப் போடும், பல பட்டதாரி இளைஞர்களை நான் அறிவேன். ஏன் இந்த நிலை? அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, இத்த தேசத்துக்கு எத்தனை டாக்டர்கள் தேவை. எத்தனை பொறியியலாளர்கள் தேவை என்கிற கணக்கு எந்தப் பல்கலைக் கழகத்திடமாவது இருக்கிறதா என்று கேட்டுப் பாருங்கள். எவரிடமும் இந்தக் கணக்கும் இல்லை. கண்ணோட்டமும் இல்லை

பல்கலைக் கழகங்களும், பணம் பண்ணுகிற வேட்டைக் காடுகளாகி விட்டன.

எனக்குப் பல பேராசிரியர்கள், நண்பர்கள். பலரும் படிப்பதையே மறந்து போனவர்கள் பி.எச்.டி பட்டம் பெற்ற பின் அவர்களுக்கு அறியுலகமே அஸ்தமித்து விட்டது. தன்னைச் சுற்றித் தன் துறையில் என்ன நடக்கிறது என்பதுகூட அறியாதவர்கள் அவர்கள்.

ஒரு இளைய இந்தியாவை உருவாக்கும் பொறுப்பில் இருக்கிறவர்கள் அவர்கள் என்கிற உணர்ச்சியே செத்துப் போய், பென்ஷன் வாங்கும் விதவைகள் மாதிரி, மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் அவர்கள்

இவர்கள் மாணவர்களை, முட்டாள்கள் என்றே இன்னமும் கருதுகிறார்கள் என்பதுதான் கவலிக்கை நான் அறிந்து, எந்த மாணவனும் தன் ஆசிரியனை விட பாமரனாக இருக்கவில்லை. இவர்கள் தங்கள் அதிகார பீடத்தைப் பயன் படுத்தி, மாணவர்களைப் பல வகைகளிலும் சுரண்டுகிறார்கள் எல்லா வகைகளிலும் சுரண்டலின் ஒன்றிரண்டு கூறுகளே இந்தக் கதை.

பல்கலைக் கழகம் பற்றி, ஒரு பெரிய நாவல் எழுத எனக்கு ஆசை இருக்கிறது. பார்ப்போம்.

இந்தத் துறையில் யோக்யர்கள் இல்லையா என்றால். சிலர் இருக்கிறார்கள். இந்த நாவலில் வருகிற துணைத் தலைவர் மாதிரி. துணை வேந்தர் என்கிற சொல்லை நானும் பயன்படுத்தி இருக்கிறேன். ஜனநாயக யுகத்தில், துணை 'வேந்தர்கள்' இருக்கக்கூடாது. இவைகள் எல்லாம் மோசமான கல்வித் திட்டம், மோசமான தலைவர்களையும், ஆசிரியர் களையுமே உருவாக்கும்.

இதுவே பல்கலைக் கழக மட்டத்தில், இன்றிருக்கும் நிலை.

இக்கதையை வெளியிட்ட நக்கீரன் குடும்பத்து 'உதயம்' பத்திரிகை ஆசிரியர் நண்பர் ர. கோபால் அவர்களுக்கு என்றும் என் நன்றி உரியது.

இன்று அழகிய நூல் உருவில் வெளியிடுகிற என் நண்பர் கவிதா பதிப்பகம் சொக்கலிங்கம் அவர்களுக்கு என் நன்றி உரியதாகுக.

பிரபஞ்சன்

முன்னுரை

நல்லது!

இந்தக் கதைகளும் பெண்கள் பற்றியதுதான். பெண்ணை, ஆணின் துணையாக நான் பார்க்கவில்லை. மாறாக, பூமியில் வாழ்கிற மானிடர்களாகவே காண்கிறேன். அவர்கள், ஆண்களுக்கு இசைவாக வடிவமைக்கப்பட்டு, 'டியூன்' பண்ண பட்டவர்களே அன்றி, அவ்வாறு இருக்கக் கடமைப்பட்டவர் கள் இல்லை.

அவர்கள் மானுடர்கள் என்பதனாலேயே, சுய சிந்தனை, சுய செயல்பாடு கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள், அவ்வாறு இருப்பது, ஆண்கள் சிலருக்குப் பாதக மாக இருக்குமே அன்றி, மனித வாழ்வுக்குப் பாதகம் இல்லை. மேலும் அதுவே சாதகமானதும் கூட! சிந்தனை தடைப்படுத் பட்ட நிலையிலோ, கருத்து சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலை யிலோ, பெண் வைக்கப்படுகையில் அவள் அடிமை ஆகிறாள். அடிமைகள் போஷிக்கப்படலாம். ஆயின், அவர்கள் வாழ்க்கை போஷாக்கு நிறைந்தது இல்லை.

இறக்கைகள் அறுக்கப்பட்ட பிறகு, பறவைகளுக்கும் பறவை என்கிற பெயர் தகுமா, என்ன? தகாது.

பெண் என்கிற பெயர், உறுப்பு வித்தியாசத்தால் வந்த பெயர்தான். பிறந்த குழந்தையை ஆணாகவோ, பெண்ணா கவோ பிரிக்கிற ஒன்று, உறுப்புதான். பிணா என்றால் பிளவு பட்டது என்று பொருள் பிளவுபட்ட உறுப்பைக் கொண்ட வள் பெண்

அது ஒன்று தவிர, இந்தச் சின்ன வெளித்தோற்ற மாறுபாடு ஒன்றைத் தவிர, ஆணுக்குப் பெண் இங்கே இளைப் பில்லை என்று சொல்ல வேண்டி இருக்கிறது. நம் சமூகம் மிகுந்த பொருள்பட சொன்னார். பிறக்கையில், இரண்டு கைகளும் சமபலத்துடன்தான் பிறக்கின்றன. பயன்பாடு காரணமாக இடது பலவீனமாகவும், அல்லது பலம் குறைந்தும். வலது பலம் மிகுந்தும் ஆகின்றன என்றார் பெரியார்.

மிகவும் சரியான, நியாயமான கருத்து, இது.

உண்மையில், அடிமைகளே, அடிமைகளை வேண்டுகிறார்கள்.

சுதந்திரர்கள் அடிமைகளை வைத்திருப்பதில்லை.

இங்கு ஆண்கள் பலர் அடிமைகள். ஆகவே, பெண்கள். அடிமைகளாக்கப்பட்டிருக்கிறார்கள்!

திருமணம் குறித்து நான் மிகவும் சிந்தித்து இருக்றேன்.

திருமணங்களே, இங்கு அசுவையானது. அதைத் தொடர்ந்து வரும் 'முதலிரவு' இங்கு அரக்கத்தனமானது.

புரிதலும், சிநேகித்தலும், விரும்புவதும், ஒத்த அலை வரிசையில் இணைவதும் அல்லவோ கலவி? கலத்தல் அல்லவோ கலவி? நீரும் நீரும் இணைவது அன்றோ கலப்பு? இங்கு எண்ணெயும் நீரும் அல்லவோ கலக்கிறது? கலந்துவிட முடியாது தத்தளிக்கிறது?

திருமணம், அதைச் செய்து கொள்பவர்களால் தீர்மானிக்கப்படும் காலம் நோக்கி, வினரவாக நடக்கிறது இந்த வையம் என்று நான் கருதுகிறேன். அது. இருனனம் சேர்தல் ஒன்றாக இருக்க வேண்டும் பெற்றோர்கள், அடிப்படைச் சம்பளம், சாதி, மதம், இனம், தேசம், சட்டம், நீதி மன்றம், காவல்துறை என்ற மனித குலத்தடைசள் எதுவும் இன்றி நிகழ்வுற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

பெண் ஆண் இணைவதில் அன்பே முழுமுதலாய் விளங்குவதோடு, அவர்கள் பிரிவிலும், அதுவே நிலைபெற வேண்டும். அன்பு காரணமாகவே இணைவதும், அன்பு காரணமாகவே பிரிவதுமான தட்ப வெட்பம் தமிழகத்தை, உலகைத் தழுவுமாக!

மிகுந்த அன்பாடு, இந்தக் கதைகளை, கவினுறப்பதிப்பிக்க முன்வந்த கவிதா பப்ளிகேஷன் திரு. சேது சொக்கலிங்கம் அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இவைகளைப் பிரசுரித்த, என் அன்புக்குரிய 'நக்கீரன்' குடும்பத்து 'உதயம்' இதழுக்காகத் திரு. கோபாலுக்கு என் பிரத்யேக நன்றியைச் சொல்ல வேண்டும்.

மற்றும் 'மாலைமுரசுக்கும்' நன்றி.

'பெண் படைப்பாளர் தம் படைப்புகள்'

முனைவர். சா. வளவன், டிசம்பர் 1995. ப. 276. ரூ. 75. முகவரி. ஏஜி. 129, 112A ஏழாவது முதன்மைச் சாலை அண்ணா நகர், சென்னை-600 040.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும், அந்நாட்டு மக்களின் கூட்டு முயற்சியும் உழைப்புமே அடிப்படையாக அமைய முடியும். நாட்டு வளர்ச்சி என்பது அவ்வக் காலத்திற்கேப ஒரு வரையறைக்குள்ளாகக் கூடியது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டு வளர்ச்சி என்பது உழவுத் தொழிலையும் வாணிகத்தையும் மட்டுமே குறிக்கக் கூடிய சொல்லாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான்.

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே''

என்று (புறம். 187) ஔவையார் குறிக்கின்றார். ஆண்களின் மேன்மைக்கேற்ப ஒரு நாட்டின் உயர்வும் அமையும் என்று ஔவையார் எடுத்துரைக்கின்றார். நிலத்தில் உழைப்பதற்கும், நிலங்கடந்து சென்று பொருள் திரட்டி மீள்வதற்கும், நிலத்து எல்லைகளைக் காத்து நிற்பதற்கும் உடலுரம் மட்டும் தேவைப்பட்ட காலமாக இருந்ததால் ஆண்மையின் முதன்மை சுட்டப்படுகிறது ஆனால், இன்று நாட்டு வளர்ச்சி அல்லது நாட்டு முன்னேற்றம் என்னும் சொல்லின் பொருள் பேறு பல உட்கூறுகளை உள்ளடக்கி நிற்கிறது. பெருகி வரும் அறிவியல் வளர்ச்சி, மனித அறிவையும் ஆற்றலையும் எண்ணிப் பார்க்க இயலாத நுண்மையை நோக்கி நகர்த்திக் கொண்டுள்ளது. ஆதலால், நாட்டு முன்னேற்றம் பல்வேறு துறைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சி அடிப்படையிலேயே இன்று அமைய முடியும் ஒட்டு மொத்த வளர்ச்சி என்பது சமூக உறுப்பினர்களின் ஒட்டுமொத்த செயலாக்கத்தினால்தான் ஏற்பட முடியும்.

ஆனால், நம் நாட்டைப் பொறுத்தவரையில் இன்றுவரை பெரும்பாலான துறைகளில் பெண்களின் வருகை அருகியே காணப்படுகிறது. மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கின்ற பெண்கள் பொதுத் துறைகளில் இன்னும் போதிய பங்கேற்கவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். ஆசிரியத் தொழில், எழுத்தர் தொழில், சிறு சிறு கைத்தொழில் முதலானவற்றைத் தவிர, பிற தொழில், துறைகளில் பெண்கள் பெறுகின்ற இடம் விழுக்காட்டு அடிப்படையில் மிகவும் குறைவாகவே உள்ளது. சமூகத்தில் இன்னும் பெண்கள் தங்களுக்குரிய

இடத்தை அடையவில்லை என்பதையே இந்நிலை சுட்டிக் காட்டுகின்றது.

சமூகத்தில் இன்னும் பெண்கள் தங்களுக்குரிய இடத்தை அடைய முடியாதவாறு தடுக்கப்பட்டு வருகின்றனர். இத்தனை தாக்குதலுக்குள்ளாகியுள்ள பெண்ணினம் பற்றிய செய்திகளையும் சிக்கல்களையும் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணவேண்டியது நாட்டு முன்னேற்றத்தில் தம் கவனத்தைச் செலுத்துவோரின் கடமையாகிறது.

இவ்வடிப்படையிலேயே பெண்கள் பற்றிய சிக்கல்களைக் கண்டறிய வேண்டியுள்ளது. பெண்கள் பற்றிய சிக்கல்களை ஆண்கள் தெரிவிப்பதைவிடப் பெண்கள் சற்று ஆழமாகவும். நுணுக்கமாகவும் தெரிவிக்கக்கூடும் என்பதால்தான் பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் ஆய்வுக்குரியனவாகக் கொள்ளப்பட்டன. இக்கால இலக்கிய வடிவங்களுள் புதினம் சற்று ஆழமாகவும் அழுத்தமாகவும் விரிவாகவும் கூறும் கலைவடிவமாதலால் பெண் எழுத்தாளர்களின் புதினங்கள் ஆய்வுக்கு உரியகளமாயின.

உலகெங்கும் உள்ள பெண்களின் சிக்கல்களையும் அவர்தம் உள்ளக் குமுறல்களையும், உரிமைப் போராட்டங்களையும் அறிந்தேற்கும் வகையில் ஐக்கிய நாடுகள் மன்றம் 1975 முதல் 1985 வரையுள்ள ஆண்டுகளை உலக மகளிர் பத்தாண்டுகளாக அறிவித்தது. அப்பத்தாண்டுக்குள் பையமாக அமைந்துள்ள 1980 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள பெண் எழுத்தாளர்களின் புதினங்கள் ஆய்வுக்குள்ளாக்கப்படுகின்றன. 1975 முதல் 1979 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட எண்ணங்களின் திரட்சியாகவும், 1981 முதல் 1985 முடிய முகிழ்க்கும் எண்ணங்களுக்கு அடித்தளமாகவும் 1980 ஆம் ஆண்டுப் புதினங்கள் அவைய வாய்ப்புண்டு என்று கருதி, இக்குறிப்பிட்ட ஆண்டில் வெளிவந்த புதினங்கள் ஆய்வுக்கு எடுந்துக் கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வு, அகவயப்பட்ட விளக்கவியல் ஆய்வாக மேற்கொள்ளப் பெற்றது; முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஆறு இயல்களை உள்ளடக்கியது. "புதின இலக்கியத்தில் பெண் எழுத்தாளர்கள்" என்னும் முதல் இயலில் அச்சுக்கலை வரவால் உரைநடை செழுமையுற்றமை, புதிய கல்வி முறையினால் உருவான புதிய சமூகப் பிரிவினரைக் களமாகக் கொண்டி புதினங்கள் வளர்ந்தமை, சிறந்தமை, பெண் எழுத்தாளர்களும் புதினங்கள் படைத்தமை, வணிக நோக்கு புதின வளர்ச்சியைத் தாக்கியமை, 1980 ஆம் ஆண்டுப் பெண் எழுத்

தாளர் புதினங்கள் பற்றிய பட்டியல் முதலிய செய்திகள் ஆராயப்பட்டுள்ளன.

''கதைக்கருவும் கதை மாந்தரும்'' என்னும் இரண்டாவது இயலில், கதைக்கருக்களின் பகுப்பு, கட்டமைப்புச் சிறப்பு, அதன் சிறப்பின்மை, கதைமாந்தர் படைப்பு, குறிப்பாகப் பெண்மாந்தர் படைப்பு, கதை மாந்தர் வழியே பெண் படைப் பாளர்கள் வரைந்து காட்டும் ஆண்களின் பண்பு முதலியன ஆய்வுக்கு உள்ளாகின்றன.

''புதின உத்திகள்'' என்னும் மூன்றாவது இயல், கதை சொல்லும் முறையில் படைப்பாளர்கள் மேற்கொள்ளும் உத்திகள், கதையைப் பின்னிச் செல்வதில் அவர்கள் மேற்கொள்கின்ற உத்திகள், படைப்பாளர்களின் வேறுபட்ட நடை உத்திகள், உரையாடலில் ஆங்கிலக் கலப்பு இடம் பெற்றுள்ள நிலை முதலியவற்றை ஆய்கின்றது.

''சமூகமும் தனிமனிதனும்'' என்னும் நான்காவது இயல், பெண் எழுத்தாளர்கள் சுட்டிக்காட்டும் சமூகச் சிக்கல்களையும் குடும்பச் சிக்கல்களையும் பல உட்பிரிவுகளில் எடுத்துக் காட்டுகின்றது மேலும் சிக்கல்களை அடையாளம் காட்டும் போதும் கருத்துகளைத் தெரிவிக்கும் போதும் ஆண்டுகளுக்கொரு நிலை பெண்களுக்கொரு நிலை என்னும் இருநிலைகளைப் படைப்பாளர் மேற்கொண்டுள்ளமையை அடையாளம் காட்டுகிறது.

''தீர்வுகள்'' என்னும் ஐந்தாவது இயலில் பெண்ணடிமை நிலை, வரதட்சணைக் கொடுமை, சாதி வேறுபாடு ஆகியவற்றிற்குப் படைப்பாளர்கள் கூறும் தீர்வுகள் கண்டறியப் படுகின்றன. மேலும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகட்குச் சிலர் கூறுகின்ற தீர்வுகளும் எடுத்துரைக்கப்படுகின்றன,

''படைப்பாளர்களின் நோக்கும் போக்கும்'' என்னும் ஆறாவது இயல். படைப்பாளர் ஒவ்வொருடைய புதின நோக்கம் பற்றியுய் அந்நோக்கத்தினை அவர்கள் புதினத்தில் எவ்வாறு இடம்பெறச் செய்கின்றனர் என்பது பற்றியும் எடுத்துரைக்கின்றது. மேலும், நோக்கத்தினை முழுமையாக எதிரொலிக்கும் புதினங்களின் போக்கினைப் பற்றியும், நோக்கத்தினை வெளிப்படுத்துவதில் தவறிவிடும் புதினங்களின் பற்றியும் இவ்வியல் ஆராய்கின்றது.

முடிவுரையில் ஆய்வின் முடிவுகளும், கருத்துகளும் தொகுத்துத் தரப்படுகின்றன. தொடர்ந்து மேற்கொள்ளத்தக்க ஆய்வுக் களங்களும் இதில் தரப்பட்டுள்ளன.

சங்கப் பலகை

"ராஜ்" படைப்புகள்

நிழல் கோபுரம் 1995. ப 160. ரூ30.

புதிய வெளியீடு

திரு. பி. என். தேவராஜன், ரிலையன்ஸ் இன்டஸ்டிரீஸ் அவர்களின் முகவுரையிலிருந்து:

"ராஜ்"ன் கதைத் தொகுப்பான நிழல் கோபுரம் ஓர் உன்னத படைப்பு. சிந்தனைக்கு நல்ல விருந்து படைப்பது, கதையில் வரும் நிகழ்வுகள் அன்றாட வாழ்வில் நடைபெறுபவை தான் இருப்பினும் அவற்றைத் தான் என்ன அழகாகத் தொடுத்து ஒரு முத்துச்சரமாகப்படைத்திருக்கிறார் ராஜ்!

ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதமான கதாபாத்திரத்தை அவற்றின் பிரச்சினைகளை நாம் பார்த்துப் பழகாத கோணத்தில் படம் பிடித்துக் காட்டுகிறது.

சிறுகதைகளைப் படிக்கும் போது கண்களில் நீர் திரையிடுகிறது. இதயத்தில் உதிரம் கொட்டுகிறது. மற்றும் சிலவற்றைப் படிக்கும்போது முகத்தில் புன்னகை தவழ்கிறது.

கதைகளில் இடம் பெறும் சம்பவங்கள் கற்பனைகளா இல்லை உண்மை நிகழ்ச்சிகளா என்கிற பிரமிப்பு நம்மைத் தாக்குகிறது. இக்கதைகளில் பல, வண்ண வண்ண ஓவியங்களாக நம் கண்முன்னே தோன்றுகின்றன..."

மல்லிகை முள் :

சிறுகதைத் தொகுப்பு

199. ப. 164. ரூ. 30.

தமிழக அரசின் சிறந்த நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 1994-ம் ஆண்டிற்கான **முதல்** பரிசு பெற்ற நூல்.

பார்வை நேரம் :

சிறுகதைத் தொகுப்பு

1993 ப. 160. ரூ 25.

இந்நூல் பாரத ஸ்டேட் வங்கியின் சிறந்த நூலுக்கான ஒரு பரிசையும், 1993-ம் வருடத் திற்கான தமிழக அரசின் **சிறு கதைக்கான** பரிசையும் பெற்றுள் ளது. திரு. எஸ் வி. எஸ். அவர் களின் முன்னுரையிலிருந்து ''.....பல பத்திரிகைகளுக்கு கதைகள் எழுதி பிரசுரிக்கப் பட்ட வரும், சிறுகதைகளுக்குப் பரிசுகளும் பெற்றவருமான திரு. 'ராஜ்'' (புனைப்பெயர்) (நிஜப்பெயர் : ராஜ கோபால்) அவர்களின் **இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள எல்லாக் கதை களுக்கும் இதுவரை எந்தப் பத்தி ரிகையிலும் பிரசுரிக்கப்படாத புத்தம் புதிய கதைகளாகும்.**

எனவே பழையமுதைப் போலில்லாமல், சுடச் சுடப் பரிமாறப்பட்ட புது விருந்தாக இத்தொகுப்பு அமையும்...''

ஒற்றை ரோஜா : சிறுகதைத் தொகுப்பு. 1992 ப 157 ரூ 25, உத்திரப் பிரதேச மாநில அரசின் 1992-ம் வருடத்திற் கான பரிசு பெற்ற சிறுகதையும் இத்தொகுப்பில் அடங்கும்.

கடிதங்கள்

ஒரு சிறந்த பணியைத் துவக்கியிருக்கிறீர்கள்.

கிராமங்களில் நூலகம் அமைக்கப் போவதாக அரசுக் குறிப்பு ஒன்றினை செய்தித் தாளில் பார்த்தேன். நல்ல ஏற்பாடு.

பள்ளி, கல்லூரி நூலகங் களில் நூலகப்பணி சிறக்க ஆவன செய்ய தங்கள் இதழ் தகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.

K. R. Soundararajan
B4. Coral Apartments
7, 20 the st
Nanganallur Madras-61.

அதிகமாக புரவலர்களைச் சேர்த்த

17 நூலகர்களுக்கு பாராட்டு: 20 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்த நூலகர், டிரைவர்களுக்கு விருது

மதுரையில் முப்பெரும் விழா

மதுரை மாவட்ட நூலகத்துறையின் சார்பில் சிறந்த பணியாற்றிய 2 ஓட்டுநர்கள் அதிக அளவு புரவலர்களைச் சேர்த்த நூலகர்கள், தேசிய நூலக விருது பெற்ற நூலகர் கிருஷ்ணன் ஆகியோருக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டு பாராட்டு பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மதுரை சிம்மக்கல்லில் உள்ள மதுரை மாவட்ட மைய நூலக கட்டிட வளாகத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை புரிந்தவாகன ஓட்டுநர்கள் மற்றும் சிறந்த நூலகர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு தங்கமெடல் மற்றும் பாராட்டு பத்திரம் வழங்குதல், தேசிய நூலகர் விருது பெற்ற நூலகர் கிருஷ்ணனுக்கு பாராட்டு விழா ஆகிய முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது.

விழாவில் கலந்து கொண்டு மாநில பொது நூலகத்துறை இயக்குநர் ஆர். கண்ணன் பேசியதாவது.

நூலகத்துறை வளர்ந்து கொண்டு தான் வருகிறது. நூலகர்கள் தேசிய விருதான பெருமைக்குரிய விருதினை பெற்று வந்திருக்கின்றனர்

தமிழக அரசு, எத்துறையில் திறமையாக பணியாற்று பவர்கள் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் இனம் கண்டு பாராட்டி வருகின்றது. அந்த பாரட்டினை நமது துறை தொடர்ந்து பெற்று வர நாம் முயலவேண்டும்.

மதுரையில் கடந்த சில மாதங்களுக்கு முன் நடத்தப்பட்ட நூலக வளர்ச்சி மாநாட்டைத் தொடர்ந்து பிற மாவட்டங்களிலும் இது போன்ற மாநாட்டை நடத்த திட்டமிடப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநில பள்ளிக் கல்வி இயக்குநர் அரங்கநாதன் பேசியதாவது:—

எந்த விழாவாக இருந்தாலும் மதுரைக்காரர்கள் தங்களது வீட்டு விழாவைப் போன்று சிறப்பாக நடத்துவதில் வல்லவர்

கள், இங்கு 20 ஆண்டு காலம் சிறந்த சேவையாற்றிய 2 வாகன ஓட்டுநர்களுக்கும், 1000 க்கும் அதிகமான புரவலர்களுக்கும் மேல் சேர்த்த 17 நூலகர்களுக்கும் கவுரவம் கொடுத்து பாராட்டப்பட்டிருப்பது சந்தோஷமளிக்கிறது. வாகன ஓட்டுநர்கள் பூமிக்கடியில் இருக்கும் வேரைப் போன்றவர்கள். அவர்களின் பணி மகத்தானது. ஊக்குவிப்புத்தான் அவர்கள் பணிக்கு தூண்டுகோலாக அமையும்.

எனது பகுதியான திருவண்ணாமலைப் பகுதிகளில் நூலகப் புரவலர்கள் 100-ஐக்கூடத் தாண்டவில்லை. ஆனால் மதுரையில் 10,40 புரவலர்களைச் சேர்த்து நூலகர் மேலும், மிகச் சிறந்த நூலகருக்கான தேசிய விருதினையும் பெற்றுள்ளார். அவரைப் பராட்டுகிறேன். அவரது சேவை இத்தோடு நின்று விடக்கூடாது. கிருஷ்ணன் ஓய்வு பெற்ற பிறகு நல்ல தொரு அரசியல் கட்சியில் சேர்ந்து சமுதாயத்திற்கு சேவை செய்ய வேண்டும்,

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் 20 ஆண்டுகளுக்கும் மேல் மிகச்சிறந்த பணியாற்றிய டிரைவர்கள் மணி. சீனிவாசன் ஆகிய இருவருக்கும் தலா அரை பவுன் மதிப்பிலான தங்க மெடலும் பாராட்டு பத்திரமும் வழங்கப்பட்டன இதேபோல், 4 அலுவலர்கள் உள்பட 17 கிளை நூலகர்கள் 15 பேருக்கும் அதிகமான புரவலர்களைச் சேரத்ததைப் பாராட்டி நினைவுப் பரிசு ஆகியவையும் வழங்கப் பட்டன. இவற்றை மாநில பொது நூலக இயக்குநர் ஆர். கண்ணன். மாநில கல்வி இயக்குநர் டி. அரசாங்கநாதன் ஆகியோர் வழங்கினர். விழாவில் முன்னதாக மாவட்ட மைய நூலகர் அய்யாபிள்ளை வரவேற்றார். முதன்மை கல்வி அலுவலர் பெருமாள்சாமி உள்பட பல அலுவலர்களும், கிளை நூலகர்களும் கலந்துகொண்டனர்,

விழா முடிவில் நூலக ஆய்வாளர் எஸ். ஆர். ராஜா நன்றி கூறினார்.

மக்கள் குரல் சென்னை பதிப்பு 19-2-1996 பக்கம் 4.

Edited. printed and published by NOOLAGAGNANI Dr. Pa. PERUMAL M A, M. Lib. Sc., Ph. D; from 6, Mu. Va. Street, Arumbakkam, MADRAS — 600 106. Phone No. 484 5034. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers 14, Yadaval Street, Aminjikarai, MADRAS—600 029.



கவிதா
பப்ளிகேஷன்

NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly February, 1996
Regd No. TN / MS (N) / 922 *R.Dis 4441 / 95.E*

மட்டை அச்சிட்டோர் :
மெட்ரோ பிரிண்டர்ஸ் & பேக்கேஜிங் இண்டஸ்டிரி சென்னை-29. ☎ 420345